# ஜாமக்காரன்

W A T C H M A N


காவல்காரன்

**VOLUME - 26** **ISSUE - 2**


*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**



கர்த்தருக்குள் அன்பானவர்களே.

உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக. ஜனவரி மாத ஜாமக்காரனில் நம் CSI டையோசிஸ்ஸின் சட்டதிருத்த மசோதாவில் பூரண மொஜாரிட்டியுடன் வெற்றி பெற்றதாக பல டையோசிஸ் பிஷப்மார் அறிவித்து, சினாடும் அதை அங்கீகரித்துவிட்டதாக அவசர அவசரமாக அறிவித்தது.

ஆயர்களின், பிஷப்மார்களின் ரிட்டயர்ட் வயது 65யிலிருந்து 67ஆக உயர்த்தக்கூடாது என்று பெரும்பான்மையான மக்கள் எதிர்த்தும் ஆயர்கள் பிஷப்மார்களுக்கு பயந்து பிஷப்மார்களின் அந்த தவறான வழிக்கு வேறு வழியில்லாது ஒத்துழைப்பு தந்தார்கள். பல கமிட்டிகள் அடிதடி கலாட்டாவுடன் நடந்தது. பல சபைகளில் கமிட்டியே நடக்கவில்லை. ஒரு இடத்தில் கமிட்டியில் சட்ட திருத்தத்திற்கு எதிர்ப்பு காட்டிய ஒருவரை ஆலயத்தில் வைத்து கொலை செய்துவிட்டனர். தேவையில்லாத இந்த சட்ட திருத்தத்திற்காக பல கொடுமையும், பயங்கரமான காரியங்களும் CSI யில்அரங்கேறியுள்ளது.

பிஷப்மார்களின் பதவி மோகம் எல்லை கடந்துபோய்விட்டது. மத்திய கேரளா டையோசிஸ்ஸில் ஒரு ஆயர் CSI டெப்டி மாடரேட்டரைப்பற்றி எழுதிய கடிதம் மட்டும் மாதிரிக்கு வெளியிட்டேன். அந்த டையோஸிஸ்சிலிருந்து பிஷப் Rt. Rev.Thomas K.Oommen அவர்களின் தவறான போக்கை கண்டித்து எழுதிய ஆயர்களின் கடிதம் எட்டு. உபதேசியார் (Catachsit) களின் கடிதம் மிக அதிகம். இதேபோல பல டையோசிஸ் பிஷப்மார்களின் மேல் ஏராளமான புகார்கள் வந்தவண்ணம் உள்ளது.

**சட்ட திருத்தம்** கொண்டுவந்ததில் என்ன தவறு இருக்கிறது என்றும் **வட இந்தியாவில்** சட்டதிருத்தம் கொண்டுவந்து அங்கு பிரச்சனை இல்லாமல் டையோசிஸ் நடந்துகொண்டு இருக்கிறதே ! என்று அமெரிக்காவிலிருந்து CSI அங்கத்தினர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் ஒருவர் இப்போது உலகிலுள்ள எல்லாருக்கும் சரீரபெலமும். **ஆயுளும்** கூடிக்கொண்டிருக்கிறது என்றும் எழுதியிருக்கிறார். இவர்களெல்லாம் **ஐரோப்பா** நாடுகளிலும்,**அமெரிக்க நாடுகளிலும்** உள்ள நிலையை உதாரணத்திற்கு கூறுகிறார்கள். இந்தியாவின் நிலை அப்படியல்ல என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.


**பிப்ரவரி 2016**

**மெதடிஸ்ட்** சபையில் ரிடயர்டு செய்யும் வயதை 70 ஆக உயர்த்துவதற்கு சட்ட திருத்தம் (Amandment) கொண்டுவர முதல் முயற்சியெடுத்த **பிஷப்** அந்த சட்ட திருத்தத்தை பல போராட்டங்களுக்கு மத்தியில் ஜெயிக்க வைத்தார்.

ஆனால் **ஜெயம் வந்த அன்றே** சட்ட திருத்தம் கொண்டுவந்த **அந்த பிஷப் மரணம் அடைந்துவிட்டார்.** எத்தனை வேதனை !

தன் 65 வது வயதைகூட அவரால் கடக்கமுடியவில்லையே! தெய்வத்துக்கு பிடிக்காத சட்ட திருத்தங்களில் முற்படும் பிஷப்மார்கள் எல்லாருக்கும் மரணம் சம்பவிக்கும் என்று நான் கூற முயலவில்லை. ஆனால் தேவனுக்கு இதில் பிரியம் உண்டா?

**ரிடயர்டு வயதை எந்தநோக்கத்தோடு கூட்டுகிறார்கள் ?** என்பதை யாருமே இதுவரை அறிவிக்கவில்லையே !

**பிஷப்மார்கள் தாங்கள் சர்வாதிகாரியாகும் வெறி, பதவி** மோகம் இதுதான் இந்த சட்ட திருத்தம் கொண்டுவர காரணமாகும். அல்லாமல் இதற்கு வேறு காரணம் இவர்களால் கூற முடியாது. சட்ட திருத்தத்தின் நோக்கம் **ஊழிய பாரம்தான்** என்று நிச்சயம் இவர்கள் யாரும் கூற முடியாது.

காரணம் இந்த அமென்மெண்டை கமிட்டியில் ஜெயிக்க வைக்க ஒவ்வொரு பிஷப்மாரும் காண்பித்த வேகம், கையாண்ட குறுக்குவழி, மேலும் தெய்வ பயம் இல்லாமல் இவர்கள் நடத்திய தவறான கமிட்டி கூட்டம், அந்த கூட்டத்தில் நடந்த **வாக்குவாதம்** பல இடங்களில் கமிட்டி கூட்டம் நடந்த ஆலயத்திலேயே தீர்மானத்தை எதிர்த்தவரை கொலைசெய்யும் அளவுக்கு பிஷப்மார்களும் இதில் சம்மந்தபட்டவர்களுக்கும் அப்படி என்ன ? சட்ட திருத்தத்தின் மூலம் சாதிக்கப் போகிறார்கள்? இப்படிப்பட்ட கொலைவெறி கொண்டு கிடைக்கும் வெற்றியால் கர்த்தர் சந்தோஷப்படுவாரா ?

☐ 70 வயது கூட்டி சட்ட திருத்தம் கொண்டு வந்த **மெத்தடிஸ்ட் சபைகளின்** பிஷப்மார் **5 வருடங்கள்** மட்டும் **பிஷப் பதவி** வகிக்க முடியும். அதன்பின் அவர்கள் சாதாரண ஆயராக செயல்படுவார்கள். அப்படிப்பட்ட நல்ல ஏற்பாட்டை ஏன் CSI சபையில் கொண்டுவரக்கூடாது ? என்பதுதான் நம்முடைய கேள்வி. உண்மையாய் CSI சபையின் நன்மைக்கு வேண்டி அல்லது ஆவிக்குரிய வளர்ச்சிக்குவேண்டி சட்டதிருத்தம் கொண்டு வரப்படுகிறது என்று யாராவது கூற முடியுமா?

இப்போது இந்த சட்ட திருத்தம் வழக்கு இன்னும் சுப்ரீம் கோர்ட்டில் நடைபெறுகிறது. இப்போது தீர்ப்பை 4 மாதங்கள் தள்ளிவைத்து விட்டனர். நீதிமன்ற ஏற்பாடுகள் இப்படி நடந்துகொண்டிருக்க சட்ட திருத்த நடவடிக்கைகளை **நடைமுறைப்படுத்த** பிஷப்மார்கள் எழுதிய அறிக்கைகள் ஆயர்களுக்கும், சபைகளுக்கும் வந்துவிட்டது. இனி அதிகாரம் முழுவதும் பிஷப்மார்களுக்கும் ஆயர்களுக்கும் ஏராளமாக சேர்ந்துவிட்டது. DC மெம்பர்கள், செகரட்டரிகளின் செல்வாக்கு இனி எடுபடாது.

CSIக்குள் இப்படி **பிஷப்மார்கள்** தவறான நோக்கங்களுடன் செயல்படுவதால் CSI இரண்டாக உடையும் அபாயம் வந்துவிட்டது. CSIக்கு பதிலாக மற்றறொரு CSI. மற்றொரு புதிய சினாட் தொடங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அதுவும் கோர்ட் மூலமாக அந்த ஏற்பாடுகள் நடைபெற்றால் CSI சபைகளும் CSIயின் சொத்துக்களும், கோர்ட்டால் **செயல்படாது முடங்கும்** அபாயம் ஏற்படபோகிறதாக அறிகிறேன்.

ஆனால் அப்படி புதிய CSI புதிய சினாட் தோன்றுவதைக்குறித்து அது நன்மையா, தீமையா என்று என்னால் இப்போதைக்கு ஏதும் கூற முடியாத நிலையில் இருக்கிறேன்.

## நெல்லை திருமண்டல செய்தி:

☐ CSI மக்கள் விழித்துக்கொண்டார்கள். பல இடங்களில் CSI சபை மக்கள் CSIயை காப்பாற்றும் எண்ணம் கொண்ட ஆயர்கள், பிஷப்களுக்கு எதிராக செயல்பட தொடங்கிவிட்டது நல்ல ஒரு அடையாளம் ஆகும். திருநெல்வேலி பிஷப்.Rev.J.J.Christdoss அவர்களை பதவிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார் என்று அறிகிறேன். இப்படி தவறான முறையில் வீதி மீறல் நடத்தி, கமிட்டி மீட்டிங்கில் அமென்ட்மென் சட்டதிருத்தம் ஏகமனதாக நிறைவேறியதாக அறிவிக்கிறேன் என்று மனசாட்சிக்கு விரோதமாக தெய்வபயம் அற்ற பிஷப்மார்கள் ஓய்வுபெற்றால் அவர்கள் யாரையும் மக்கள் மதிக்கமாட்டார்கள். ஒரு அடக்க ஆராதனை நடத்தக்கூட மக்கள் விரும்பமாட்டார்கள்.

☐ பல CSI டையோசிஸ்களில் சட்டதிருத்தம் கொண்டு வரமுயன்ற பிஷப்மார்களுக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு என்று வேதம் கூறுகிறது.

## கன்னியாகுமரி திருமண்டல செய்தி:

☐ கடந்த பிப்ரவரி மாதம் கன்னியாகுமரி டையோசிஸ் முன்னாள் பிஷப் Rt. Rev. தேவகடாச்சம் அவர்கள் டையோசிஸ் அலுவலகத்துக்கு சென்றபோது டையோசிஸில் CSI பாரம் உள்ள சிலர் அவரை வெளியே போக கட்டாயப்படுத்தினார்கள். நீங்கள் ரிடயர்ட் ஆகிவிட்டீர்கள். இனி டையோசிஸ் அலுவலகத்துக்கோ, ஆலய சிறப்பு வழிபாடுகளுக்கோ நீங்கள் பங்கெடுக்க உரிமை இல்லை என்றனர். ஆனால் அவரோ பழைய மாடரேட்டர் கூறுவதுபோல சுப்ரீம் கோர்ட்டின் இறுதி தீர்ப்பு வரும் வரை நான் பதவியில் இருப்பேன் என்றார். அதே பதில்தான் ரிடயர்ட் Rt. Rev. தேவகடாச்சம் அவர்களும் கூறியிருக்கிறார். ஆனால் மக்களோ அவரை **அலுவலகத்தில் அமர விடாமல்** வலுக்கட்டாயமாக வெளியேற்றினர். இந்த நிகழ்ச்சிகளை SUN TV சேனல் மூலம் உலகமே கவனித்தது. பதவி வெறியும், ஆசையும் இன்னும் தொடர்ந்துகொண்டிருப்பது மனதிற்கு மிகவும் வேதனையை கொடுக்கிறது. நம் எல்லொரும் CSIக்கு வேண்டி ஜெபிப்போம்.

☐ நான் வட இந்திய ஊழியத்திற்கு சென்றதால் **ஜனவரி** ஜாமக்காரன் **பெப்ருவரி** மாதம்தான் வெளியிட முடிந்தது. இன்னும் 4 மாதங்களுக்கு ஊழியம் அதிகம் இருப்பதால் ஒவ்வொரு ஜாமக்காரன் பத்திரிகையும் குறிப்பிட்ட மாதத்தில்வெளிவராது தாமதமாகத்தான் வெளிவரும் என்பதை அறிவிக்கிறேன். ஜாமக்காரன் உரிய நேரத்தில் வெளியிடாததால் ஏன் அனுப்பவில்லை என்று கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள், பதில் கூறி தளர்ந்து போனேன். அதே சமயம் மக்கள் ஜாமக்காரனை எத்தனை ஆவலாக எதிர்பார்க்கிறார்கள் என்று அறியும் போது மனதில் தேவனை துதிக்கிறேன். ☐ கிறிஸ்துமஸ்க்கும், புதிய வருடத்துக்கும் ஏராளமானவர்கள் எனக்கு பணம் அனுப்பினீர்கள்.M.O. மூலமாகவும் செக் மூலமாகவும் காணிக்கை அனுப்பிய யாருக்கும் என் நன்றியை கூறிக்கொள்கிறேன். Online மூலமாக காணிக்கை அனுப்பியவர்களுக்கும் நன்றி கூறிகிறேன்.

☐ நான் வாரத்தில் **செவ்வாய்கிழமை** மட்டும் வீட்டில் இருப்பதால் நான்கு தொலைபேசி (Landline) இருந்தும் மிக அதிகமானபேர் போன்வழி தொடர்புகொள்ள முயலுவதால் என்னோடு நீங்கள் தொடர்புகொள்ள உங்களுக்கு போன்லைன் கிடைப்பது கடினம். ஆகவே ஜெபகுறிப்புகளை அனுப்பு விரும்புவோர், ஆலோசனை கேட்க விரும்புவோர்கள் **கடிதம் மூலம்** அல்லது e.mail மூலமும் எனக்கு அறிவியுங்கள். என் பதில் தாமதமானாலும் கண்டிப்பாக உங்கள் கடிதங்களுக்கு ஜெபித்து பதில் கடிதம் எழுதுவேன். e.mail அனுப்புபவர்கள் உங்கள் **விலாசம், போன் நெம்பர்** கண்டிப்பாக எழுதவும் சில சமயம் e.mail ல் நீங்கள் எழுதிய விஷயத்துக்கு **போன் மூலம்** பதில் கூறி **போனிலேயே** ஜெபிப்பேன். இம்மாத ஜாமக்காரனில் என் முதல் மிஷனரி அனுபவத்தையும் என் ஊழியத்தின் பாதையில் உண்டான மற்ற அனுபவங்கள் பற்றியும் எழுதியுள்ளேன்.

**கர்த்தரின் உன்னத பணியில் ✍ டாக்டர்.புஷ்பராஜ்**

# திரும்பி பார்க்கிறேன்

## NO. 1

பல வருடமாக என் நெருங்கிய நண்பர்களும் ஊழியக்காரர்களும், விசுவாசிகளும் என் சாட்சியை சிறு புத்தகமாக எழுதி வெளியிடும்படிகேட்டிருந்தார்கள்.

என் சாட்சி யாருடைய மனதையாவது மாற்றும் என்றோ, மற்றவர் எதிர்பார்ப்பது போல் அவைகள் சிறப்பானது என்றோ கூறவே முடியாது. நான் பேசும் எல்லா கூட்டத்திலும் நான் மனந்திரும்பின என் சாட்சியை கூறாமல் இருந்ததே கிடையாது ஆக பெரும்பாலானவர்கள் என் சாட்சியை அறிந்துள்ளார்கள். ஆனால் என் சாட்சியில் கூறாத அதிகமான அனுபவங்கள் என் ஆவிக்குரிய ஊழியத்தில் நிறைய உண்டு. அவைகளை ஒரு சில இடங்களில் மட்டுமே கூறியிருக்கிறேன். அந்த அனுபவங்களை துண்டு துண்டாக அவ்வப்போது NEWS LETTER கடிதமும் செய்தியும் என்ற பெயரில் 1970ம் ஆண்டு வெளியிட்ட ஆரம்பகால பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறேன். அதன்பிறகுதான் என் பத்திரிக்கைக்கு **ஜாமக்காரன்** என்ற பெயர் பதிவு செய்யப்பட்டது. நீங்கள் இதை படித்து பார்த்து இந்த அனுபவங்களை நான் தொடர்ந்து எழுதினால் எந்த உள்ளத்திற்காவது பிரயோஜனப்படுமா என்பதை எனக்கு அறிவியுங்கள் என்று அன்று நான் அறிவித்திருந்தேன்.

என் முழு சாட்சியை எழுதுவேனேயானால் நான் கடந்த வந்த பாதையில் நான் சந்தித்தவர்களை பற்றியும், சந்தித்த ஊழியர்களை பற்றியும் நிச்சயமாக கூறவேண்டியிருக்கும். அது அவர்களுக்கு என்மேல் கூடுதல் மனஸ்தாபத்தை உண்டாக்கும். என்னில் உண்டான குறைகளையும் அதோடு சேர்த்து குறிப்பிட வேண்டியிருக்கும். அது புது குழப்பங்களையும், மனஸ்தாபங்களையும் உண்டாக்க ஏதுவாகும். அந்தவித இக்கட்டான நிலையை நீங்களும் விரும்பமாட்டீர்கள்! ஆகவே இம்முறை அவைகளை எழுதவில்லை

☐ என் முதல் அனுபவமாக என் வாழ்க்கையில் நடந்த மறக்கமுடியாத நிகழ்ச்சி ஒன்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

**லாரி விபத்து :** பெங்களூருக்கு ஒரு லாரியில் பிரயாணமாகி சென்றுகொண்டிருக்கும் வேளையில் ஒசூர் அருகே ஒரு ஏரியின் கரையோர ரஸ்தாவில் வைத்து நான் சென்ற லாரி தலைகீழாக கவிழ்ந்தது. என்னை தவிர லாரியில் இருந்த டிரைவர், கிளீனர் இருவருக்கும் பலமான அடி. கிளீனர் மரிக்கும் தருவாயில் கிடந்தார். வண்டி கவிழ்ந்து கெஞ்ச நேரத்தில் எனக்கு சுய நினைவு வந்து லாரியின் முன் பக்க கண்ணாடியை காலால் உதைத்து வெளியே குதித்தேன். அதற்குள் சாலையின் இரண்டு பக்கமும் வாகனங்கள் நிற்கிறதையும் பஸ்களிலிருந்து மக்கள் எங்களுக்கு உதவிசெய்ய ஓடிவருகிறதையும் கண்டேன். அவர்கள் எங்கள் லாரி அருகே வந்து ஆம்புலன்ஸ் வரவழைத்து அப்புறப்படுவதற்குள். அதோடு மற்றவர்கள் என்னை விசாரிப்பதற்குள் நான் எதிர்புறம் நின்றிருந்த வேறு வண்டியில் ஏறி **சேலம்** வந்து சேர்ந்தேன். கர்த்தர் தம் கரங்களில்வைத்து என்னை பாதுகாத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- இந்த நிகழ்ச்சிக்குப்பின் 1965ம் வருடம் கோயமுத்தூர் டையோசிஸ் திருப்பூர் CSI ஆலயத்தில் VBS கூட்டங்கள் நடத்த நாங்கள் குழுவாக திருப்பூர் சென்று இருந்தோம். அப்போது சபை போதகரின் வீட்டின் அருகே திறந்தவெளியில் கொட்டிக்கிடந்த மணலில் இரவு நேரம் படுத்தவாறே சில நாட்களுக்குமுன் நடந்த அந்த பயங்கர லாரி விபத்தையும், கர்த்தர் என்னை காப்பாற்றிய விதத்தையும் சிந்தித்துக்கொண்டிருந்தேன்.

ஏன் இந்த விபத்து அன்று நடந்தது ? அதே விபத்தில் மற்றவர்கள் அனுபவித்த விபத்தின் கோரமும் வேதனையும் எனக்கு நேராமல் போனதின் இரகசியம் என்ன? ஏன் கர்த்தர் என்னை மட்டும் காப்பாற்றவேண்டும் ? இந்த கேள்விகள் எனக்குள் எழுந்ததால் உள்ளத்தில் நன்றி உணர்ச்சி உண்டாகி தேவனை துதித்தேன். மறுநாள் நான் சேலம் வந்து டேனிஷ்பேட்டை **பெத்தேல் பெல்லோஷிப்பில்** ஒரு சகோதரனிடம் லாரி விபத்தைப்பற்றி பகிர்ந்துகொண்டேன். அதை கேட்ட அவர் கர்த்தர் என்னைப்பற்றி ஏதோ ஒரு நோக்கம் வைத்துள்ளார் அதனால்தான் நீங்கள் உயிரோடு இருக்கிறீர்கள் என்று எனக்கு ஆலோசனை கூறினர். அந்த நோக்கம் என்ன என்று நான் அறிந்து அதை நான் நிச்சயமாக நிறைவேற்ற வேண்டும் என்று அன்றிலிருந்து துடியாய் துடித்தேன்.

## என் முதல் மிஷனரி ஊழிய அனுபவம்

**FMPB நண்பர் சுவிசேஷ ஜெப குழுவை முதன் முதல் தொடங்கிய ஸ்தாபகர்களின் புகைப்படத்தைதான். நீங்கள் கீழே காண்கிறீர்கள்**



**Bro.P.Samuel,Rev.Theodre Williams,Rev.Fredgokavi and Dr.Sam Kamalesan**

**FMPB யின் முதல் மிஷனரிகள்**



**DR.PUSHPARAJ**



**Bro. HARRIS HILTON**

# FMPB சரித்திரத்தில் பதிவு பெறாத முதல் மிஷனரி

**பெயர் சீனிவாசன்** அவர் சொந்த ஊர் தமிழ்நாட்டில் **பென்னாகரம்** என்ற ஊரின் அருகே **கடமடை** என்ற சிற்றூர் ஆகும். இவருக்கு மனைவி உண்டு. இவரின் முன்கோபம் காரணமாக ஒருவரை கொலை செய்துவிட்டு ஜெயிலுக்கு போனவர்.

ஜெயிலுக்கு சென்ற இவருக்கு ஜெயிலில் சிலர் சுவிசேஷம் அறிவிக்க **சீனிவாசன் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக** ஏற்றுக்கொண்டார். பைபிளை விலைக்கு வாங்கி படித்து ஜெயிலுக்குள்ளேயே இவர் நல்ல விசுவாசியாக மாறினார். ஜெயிலில் தன்னை பார்க்கவந்த தன் மனைவியிடம் தான் ஏற்றுக்கொண்ட இயேசுகிறிஸ்துவை கூற, அவளும் கிறிஸ்தவராக மாறினார். சீனிவாசனின் நல்நடத்தை காரணமாக ஜெயிலில் தண்டனை குறைக்கப்பட்டு **விடுதலையும்** பெற்றார். அதன்பின் தன் மனைவியுடன் சந்தோஷமாக குடும்பம் நடத்தி அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க தொடங்கினார்.

ஆனால் அவரின் சொந்த ஊர் மக்களோ **சீனிவாசனை** ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை ஒரு கொலையாளியாகவே பார்த்தனர். அந்த கிரமாத்தில் உள்ள எவரும் சீனிவாசன் தன் வீட்டுக்கு வருவதை விரும்பவில்லை. ஆகவே அந்த கிராமத்தில் இயேசுவைப்பற்றி கூறவும் யாரும் அனுமதிக்கவில்லை. ஆகவே சீனிவாசன் அவர்கள் தன் சொந்த வீட்டையும், உறவினரையும்விட்டு பிரிந்து அவர் சொந்த கிராமத்தைவிட்டே வெளியேறினார். **பெரியமலை** அடிவாரத்தில் ஒரு புறம்போக்கு நிலத்தில் ஒரு குடிசைக்கட்டி பெரியமலைக்கு சென்று அங்கு காடுகளில் உள்ள முற்றிய மூங்கிலை வெட்டி அவைகளை தலையில் சுமந்து **மாரண்டஹள்ளி** மரக்கடைகளில் விற்று தன் வாழ்க்கையை நடத்தினார். மலையில் மூங்கிலை வெட்டி சாய்த்து அதை கட்டுகட்டி சற்று ஓய்ந்திருக்கும் நேரத்தில் அங்குள்ள ஆதிவாசிகளுக்கு **இயேசுவை** அறிவித்தார். அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ ! ஆனால் இயேசுவை அவர்களுக்கு அறிவித்துவிட்ட திருப்தி இவர் மனதுக்குள் ஏற்பட்டது. வன அதிகாரிகளிடம் இவர் அகப்பட்டால் அவர்களுக்கும் இயேசுவை அறிவிப்பார். ஆகவே வன அதிகாரிகள் இவரிடம் லஞ்சம் வாங்கினாலும் சீனிவாசனிடம் தனி மரியாதை காட்டினார்கள். கிருஷ்னகிரியில் சகோ.கனகரத்தினம்M.A., ஐயா அவர்கள், IEM ஜெபகுழுவில் இனைந்து சகலருக்கும் சுவிசேஷம் என்ற தனியாத ஆசையில். தனித்தாள் ஊழியம் செய்துவந்தார், **சீனிவாசனின்** ஊழியத்தை அறிந்து வைத்திருந்தார். டேனிஷ்பேட்டை Bro.P.**சாமுவேல்** அவர்களும், FMPBயின் புதிய பொதுச்செயலர் பதவி ஏற்ற சகோ.எமில்ஜெபசிங் அவர்களும் முதல் மிஷனரி பணித்தளத்தை சர்வே எடுக்க **(பஞ்சமலை)பெரியமலை** பகுதிக்கு முதல்முறை சென்று வந்தனர். இரண்டாம் முறை செல்லும்போது ஒரே நாளில் போய் அன்றே திரும்புவதனால் நானும் (Dr.புஷ்பராஜ்) உங்களுடன் வருகிறேன் என்றேன். அவரும் என்னை தன்னுடன் அழைத்து சென்றார். வழியில் சகோ.**கனகராஜ்** ஐயாவை சந்தித்தோம். அப்போது அவரும் மலை அடிவாரத்தில் குடியிருக்கும் திரு. **ரத்தினசாமி** (தலைமையாசிரியர்) அவர்களும் **சீனிவாசனின்** ஊழியத்தைபற்றி நிறைய விவரங்கள் கூறினார்கள். உடனே சகோ.சாமுவேல் அவர்களும்,சகோ.எமில் அவர்களும்,சகோ.சீனிவாசனை நாம் FMPBயில் சேர்த்து மிஷனரி ஊழியத்தை தொடங்கிவிடலாம் என்று கூறினார்கள்.

அங்குள்ளவர்கள் அவரை எந்த நேரத்தில் பார்க்கலாம் என்று தோராயமாககூட கூற முடியாது. ஆனால் மூங்கிலை கொண்டுபோய்சேர்க்கும் மரக்கடைக்காரரிடம் சென்று அங்கு காத்திருந்தால் சீனிவாசனை கண்டுபிடிக்கலாம் என்று கூறப்பட்டதால் சகோ. **கனகரத்தினம்** ஐயா அவர்களும் சகோ. எமில் அவர்களும் மாரண்டஹள்ளி கடைவீதியிலுள்ள மரக்கடையை நோக்கி சென்றார்கள். நான் மட்டும் அன்றே சேலம் திரும்பிவிட்டேன். அதன்பின் சகோ. எமில் அவர்கள் சீனிவாசனிடம் பேசி FMPB மூலமாக நாங்கள் மாதம் ஒரு தொகையை தருகிறோம். மூங்கிலை திருட்டுத்தனமாக வெட்டி விற்கும் வேலையை நிறுத்திவிடுங்கள் என்றார். அதன்பின் சீனிவாசன் FMPBயின் பெயரில் மிஷனரியாக பெரியமலைக்கு சென்று வந்தார். இந்த சம்பவங்களையும் ஏற்பாடுகளையும் எதுவும் FMPB அலுவலகத்தில் அன்று பதிவு செய்திருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். சில சமயம் கனகரத்தினம் ஐயா அவர்கள் நம் சகோ . சீனிவாசனுடன் இணைந்து பெரிய மலை ஊழியத்துக்கு சென்று வந்ததாக கேள்விபட்டேன். சுமார் மூன்று மாதத்துக்குபின் சீனிவாசன்

தான் ஒரு ஸ்தாபனத்துக்குள் இருந்து ஊழியம் செய்வது எனக்கு பிடிக்கவில்லை என்றும், என்னை சுதந்திரமாக விட்டுவிடுங்கள் என்று கூறி FMPB ஐக்கியத்திலிருந்து விடுபட்டார் என்பதாக கேள்விப்பட்டேன்.

ஆக FMPBயில் **முதல் மிஷனரி** என்று கூறினால் அது சகோ. **சீனிவாசனைத்தான்** குறிப்பிட வேண்டும். அவர் போட்டோ என் கைவசம் இல்லை. கடந்த மாதம் அவரப்பற்றி பென்னாகரம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகி இடங்களில் சென்று விசாரிக்க நண்பர்களை கேட்டுக்கொண்டேன். விவரம் கிடைத்தால் வரும் நாட்களில் சீனிவாசனைப்பற்றி நல்ல தகவல்களை வாசகர்களுக்கு அறிவிப்பேன்.

## FMPBயின் முதல் பொது செயலர்



டாக்டர் **தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள்தான் FMPB உருவாக்கப்பட்ட உடனே **பொதுச்செயலர்** பொறுப்பை அதிகார பூர்வமாக ஏற்று செயல்பட்டார். அதன்பின் டேனிஷ்பேட்டை (பெத்தேல்) சகோ.**P.சாமுவேல்** அவர்கள் தன் உறவினரான **எமில் ஜெபசிங்கை** FMPBக்கு அறிமுகப்படுத்தினார். உடனே பொதுச்செயலர் பொறுப்பை சகோ. **எமில் ஜெபசிங்** அவர்களிடம் ஒப்படைத்து அதன்பின்தான் **Dr.Rev.தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் IEM மிஷனரி ஸ்தாபனத்தை பெங்களூரில் தொடங்கினார்.

மேலே குறிப்பிடப்பட்ட சம்பவங்களுக்கு ஆதாரம் அன்றைய நாட்களில் சகோ. எமில், சகோ. கனகரத்தினம், சகோ.ரத்தினசாமி, ஆகிய இவர்கள் எனக்கு எழுதிய கடிதங்களும், அதில் எழுதப்பட்ட விவரங்களும், நான் எழுதிய சம்பவங்களை உறுதிபடுத்தும்.

மேலே எழுதிய FMPBயின் **முதல் மிஷனரி,** முதல் **பொது செயலர்** யார் ? என்ற விஷயங்கள் **மறைக்கப்ட்ட** சரித்திரங்களாக ஆகிவிடக்கூடாது என்பதற்காக இதை இங்கு குறிப்பிட்டேன்.

### மிஷனரியாக நான் ஊழியம் செய்ய என்னை உணர்த்திய சம்பவம் :

1963ம் வருடம் முதல் ஒவ்வொரு வருடமும் ஆவிக்குரிய மிஷனரி கூட்டங்கள் **மாநில முகாம்** என்ற பெயரில் சேலம் டேனிஷ்பேட்டையில் நடக்கும். கூட்டத்தின் முடிவில் மிஷனரியாக ஊழியம் செய்ய பலர் தீர்மானம் எடுப்பார்கள். ஆனால் அதன்பின் அந்த தீர்மானத்தை மறந்த நிலையில் அன்று தீர்மானித்த யாரும் மிஷனரியாக ஊழியம் செய்ய வரவில்லை. ஒவ்வொரு வருட கூட்டத்திலும் சந்தியா ஜெபவேளையில் மிஷனரிகளாகபோவேன் என்று கூறி தீர்மானத்தின் அடையாளமாக தங்கள் **கரம் உயர்த்தி தன்னை ஒப்புக்கொடுப்பார்கள்.** ஆனால் கூட்டம் முடிந்து அவரவர் ஊர் சேர்ந்ததும், **கரம் தூக்கின** யாரிடமிருந்தும் எந்த பதிலும் வருவதில்லை. சில வருடம் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தியும் மிஷனரி பணி செய்ய யாரும் முன்வரவில்லை. இதை குறித்து நான் மிகவும் யோசித்தேன். அப்படியானால் இவர்கள் மாநில முகாமில் நடந்த கூட்டத்தில் **ஏன் கைகளை தூக்கி தீர்மானம்** எடுக்கிறார்கள் என்ற கேள்வி எனக்குள் எழ, **நீயும்தான் அதே கூட்டத்தில் தீர்மானம் எடுத்தாய் அல்லவா?.** நீ மிஷனரியாக ஊழியம் செய்ய முன் வந்தாயா? என்ற கேள்வியை கேட்டு ஆவியானவர் என் உள்ளத்தில் பெரும் போராட்டத்தை உண்டாக்கினார். அதன் விளைவு ஒரு நாள் திடீரென்று மிஷனரியாக போய்விட துணிந்து தீர்மானம் எடுத்தேன். மறுநாள் பெத்தேல் ஆஸ்பத்திரிக்கு சென்று சகோ P. **சாமுவேல்** அவர்களிடம் மட்டும் என் தீர்மானத்தை கூறினேன். மற்ற FMPB பொருப்பாளர்களுக்கு முதல் மிஷனரி கிடைத்துவிட்டார் என்ற செய்தி தந்தி மூலம் தகவல் பறந்தது. நானோ என் பெற்றோரிடம்கூட மிஷனரி ஊழியத்தைக்குறித்து கலந்து ஆலோசிக்கவில்லை. முடிவு ? கர்த்தருக்கென்று முழு நேர பணியாளனாக, **மிஷனரியாக** என் வைத்திய பணியோடு சுவிசேஷ ஊழியம் செய்யும் முடிவுடன், **முதல் மிஷனரியாக** பெரியமலை என்று கூறப்படும் மலைக்கு புறப்பட்டேன். மேற்கூறிய சம்பவம்தான் **மிஷனரியாக** செல்ல என்னை தூண்டியது.

☐ அதே சமயம் (நெல்லை)தாளயூத் சிமெண்ட் தொழில்சாலையில் பணியாற்றிய சகோ. **ஹாரிஸ் ஹில்டனும்** மிஷனரி பணிக்கு தன்னை ஒப்புக்கொடுத்தவராக அவரும் இரவோடு இரவாக புறப்பட்டு பெரியமலை அடிவாரமாகிய **மாரன்டஹள்ளி** என்ற ஊருக்கு வந்து சேர்ந்தார். இதே பெரியமலையில்தான் சந்தன மரக்கொள்ளையன் வீரப்பன் தங்கியிருந்தான்.

☐ 1967 வருடம் ஜுன் மாதம் 9ம் தேதி என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நாள் ஆகும். FMPB Dr. **சாம் கமலேசன்,** Bro. P. **சாமுவேல்** Bro. **மோகன்** Bro. **எமில் ஜெபசிங்** ஆகியோர் **என்னையும்**. சகோ **ஹாரிஸ் ஹில்டனையும் முதல் மிஷனரியாக** பெரியமலை என்று அழைக்கப்படும் அந்த மலையின் மலை அடிவாரத்தில் 1967 ஜுன் மாதம் 9ம் தேதி அதிகாலை 5-30 மணிக்கு **பிரதிஷ்டை ஆராதனை** நடத்தினார்கள். மேலே குறிப்பிட்ட **நான்கு பேரும்** எங்கள் தலையில் கைகளை வைத்து FMPBயின் முதல் மிஷனரிகளாக எங்கள் இருவரையும் **பிரதிஷ்டை** செய்தனர். அதன்பின் எங்கள் சாமான்களை இரண்டு கழுதைகளின்மேல் ஏற்றி எல்லாரும் நடந்து மலை ஏறி நடந்து பயனம் செய்தோம். எங்களுக்கு உதவ **ஏசா** என்ற ஜெபபாரம் உள்ள சகோதரனையும் அனுப்பிவைத்தனர். மதியம் 11 மணிக்கு பெரிய மலையில் உள்ள காட்டுக்குள் **பெட்டமுகுளாளம்** என்ற கிராமத்தை அடைந்தோம்.



சமீபத்தில் மரித்துப்போன சகோ.**ஏசா** அவர்கள்

நாங்கள் தங்கி ஊழியம் செய்ய குடிசை தேடினார்கள். அந்த கிராமவாசிகள் **பன்றிகள்** அடைத்து வைக்கும் சிறுகுடிசை ஒன்று காலியாக உள்ளது.

அந்த குடிசையைத்தான் எங்களுக்கு கொடுத்து உதவினர்.

**பன்றிகளை** அடைத்து வைத்த அந்த சிறு குடிசைதான் **மிஷனரி வீடாக** நாங்கள் தங்குவதற்கு கர்த்தர் கிருபையாக ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார். ஒரு ஆள் குனிந்து செல்லத்தக்க அளவில் குறுகிய உயரமுள்ள அந்த குடிசையில் சிறுவாசல்படி அமைந்திருந்தது. எங்களை பணித்தளத்தில் விட வந்த பொருப்பாளர்கள் குடிசைக்குள் நின்று ஜெபிக்க இடம்போதாது. நான்கு பேர் உள்ளே உட்காரவும் முடியாது. ஆகவே வந்தவர்கள் அனைவரும் வெளியே நின்று ஜெபித்து, அந்த மிஷனரி வீட்டுக்கு **யெகோவாயீரே** என்ற பெயர் சூட்டினர். எங்களைவிட்டுவிட்டு இருள்வருவதற்குள் மலையைவிட்டு அவர்கள் யாவரும் இறங்கி சென்றுவிட்டனர்.



**மாதிரி குடிசை**

## மிஷனரி ஊழியத்தில் என் சுபாவத்தில் உன்டான மாற்றம்.

☐ FMPB நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பில் **சில மாதங்கள்தான்** அந்த காட்டில் **நான்** தங்கி ஊழியம் செய்தேன். ஆனால் அந்த நாட்களில் நான் பெற்ற புதிய அனுபவம், பெற்ற ஆசீர்வாதம் மறக்க முடியாதது ஆகும். **டாக்டர்** என்ற **என் பெருமை** அகம்பாவத்தை, **ஆணவத்தை** யாவும் அங்குதான் கர்த்தரால் ஒழிக்கப்பட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். **மேற்கு தொடர்ச்சி** மலையை சேர்ந்த அந்த மலையின் பெயர் **பெரியமலை** என்பதாகும். மலையில் ஊழியம் செய்த இடத்தின் பெயர் **பெட்டமுகுளாளம்** என்பதாகும். அடர்ந்த காட்டின் நடுவில் நாங்கள் தங்கிய அந்த சிறு **பன்றி குடிசை,** வீட்டின் சுவர் இரண்டு அடி உயரம்தான் அந்த சுவரின் சுற்றிலும் **வெடிப்பும் ஓட்டையும்** உண்டு. அதில் வாழும் விதவிதமான விஷ ஜந்துக்கள் ஏராளம்.

அதை பார்க்க விநோதமாக இருந்தது. தினமும் சுவற்றில் **குட்டி பாம்புகள்** நெளிந்து செல்வதையும், **பூரான்** ஓடுவதையும் காணலாம். அதை நாங்கள் கொல்வதில்லை. காரணம், தினமும் எத்தனை பாம்புகளை கொல்வது, எத்தனை தேள்களை கொல்வது, மேலும் அவைகளும் எங்களுக்கு ஒரு தீங்கும் செய்வதில்லை.

அந்த மலைப்பகுதியில் இரவு நேரம் எப்போதும் பயங்கர குளிராக இருக்கும், எங்கள் இருவருக்கும் போர்த்திகொள்ள ஒரே ஒரு **கம்பளிதான்** இருந்தது. இருவரும் சேர்ந்து போர்த்திக்கொள்வோம். மறுநாள் பார்த்தால் எங்கள் கம்பளியின் மேல் எலி குஞ்சுகளும், பூரானும் மேயும். அப்படியே நான்கு மூலையையும் பிடித்து கம்பளியை வெளியே எடுத்து உதறிவிட்டு நாங்கள் காலை ஜெபிக்க ஆரம்பிப்போம்.

## ஊழியத்தில் முதல்முறை பட்டினி அனுபவம் :

ஒரு நாள் வெகு தொலைவில் உள்ள ஒரு கிராமத்திற்கு சென்று சுவிசேஷம் அறிவிக்க திட்டமிட்டோம். மதிய உணவை ஒரு பொட்டலமாக கட்டி எடுத்துக்கொண்டு, குறிப்பிட்ட இந்த கிராமத்தை சந்தித்து சுவிசேஷம் அறிவித்து அன்று மாலையே எங்கள் குடிசைக்கு வந்து சேர்ந்துவிட வேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம். அதிகாலை இருட்டோடே புறப்பட்டோம். நாங்கள் சென்ற பாதையானது பயங்கரமானது ஆகும். அடர்த்தியான காட்டுக்குள்ளே வளைந்து வளைந்து ஒத்தையடி பாதை சென்றது. எங்கள் பாதையில் எதிரே வந்த ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்துக்கொண்டே சென்றதால் நேரம் கடந்துவிட்டதை அறியாமல் போனோம். பசி எடுத்தது,கையில் கொண்டுவந்த பொட்டலத்தை பிரித்து சாப்பிட்டு, மறுபடியும் நடக்கத் தொடங்கினோம்.

நாங்கள் சென்ற பாதை இதுவரை போகாத பாதை, அந்த கிராமமும் இதுவரை சந்திக்கப்படாத ஒன்று. ஆகவே, எப்படியும் அந்த கிராமத்துக்கு போகாமல் திரும்புவதில்லை என்ற தீர்மானத்தோடு வேகமாக நடந்தோம். எதிரில் மரங்கள் அடர்ந்த இருட்டான பகுதி மூங்கில் புதர்களால் நிறைந்து இருந்தது. அங்கு காட்டு யானை ஒன்று இருட்டோடு இருட்டாக கருப்பாக மரம் உயரம் நின்றுகொண்டிருப்பதை நாங்கள் கவனிக்கவில்லை, நாங்கள் அந்த யானையை நெருங்கிவிட்டோம். இன்னும் கொஞ்சம் நெருங்கி இருந்தால் யானையின் பின்னங் கால்களில் முட்டி நின்று இருப்போம். அந்த யானை கொஞ்ச நேரத்தில் சானம், சிறுநீர் கழித்துவிட்டு சென்றுவிட்டது. அந்த சானத்தையும், சூடாயிருந்த சிறுநீரையும் மிதித்தபின்தான் யானை எங்கள் வெகு அருகில் நடந்து போவதை உணர்ந்தோம். உடனே அங்கேயே நின்று ஒரு சிறு ஜெபம் செய்தோம். அப்போது சகோ. ஹில்டன் கூறினார். பயப்படாதீர்கள். நம்ம அப்பா படைத்த மிருகம்தானே, ஆகவே அது நம்மை ஒன்றும் செய்யாது என்று தைரியப்படுத்தினார். அந்த யானை திரும்பிப்பார்க்காமல் சென்று விட்டது.

நாங்கள் எதிர்பார்த்த கிராமத்துக்கு நாங்கள் வந்தடையும்போது மாலை 5-00 மணி ஆகிவிட்டது. அந்த கிராம மக்களுக்கு சுவிசேஷம் வேகவேகமாக அறிவித்துவிட்டு உடனே திரும்பினோம். ஆனால் ஊர் மக்கள் எங்களை திரும்பிபோகக்கூடாது என்று தடுத்தனர். காரணம் பாதி தூரம் போவதற்குள் இருட்டிவிடும், நீங்கள் உங்கள் கிராமம் போய்சேரமுடியாது, வழியில் பயங்கர காட்டிமிருகங்கள் வேறு காணப்படும் என்று கூறி தடுத்தனர். இதிலே ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால் எங்களை போக வேண்டாம் என்று தடுத்த அந்த கிராம மக்கள் எங்களை எந்த வீட்டிலும் தங்க அனுமதிக்கவில்லை. அவர்கள் கிராம கட்டுப்பாட்டின்படி எங்களை அவர்கள் வீட்டின் தின்னையில்கூட படுக்க அனுமதிக்கவில்லை.

எங்களுக்கு பசி வேறு அதிகமாகிவிட்டது. நடந்த களைப்புவேறு, கையில் காசும் இல்லை, வேறு கிராமத்துக்கு சென்று இரவு தங்க வேறு இடம் பார்க்கலாம் என்றால் அங்கேயும் அதே கிராம கட்டுப்பாடுதான்.

பக்கத்தில் மூங்கில் லாரிகள் போகும் பாதையை கண்டோம், இந்த பாதை எங்கு போகிறது என்று கேட்டோம். 11வது மைலில் உள்ள ஒரு சிறு ஊரை (டெங்கனிக்கோட்டை) அடைகிறது என்றார்கள். மேல்நோக்கி போனால் மலை காட்டுப் பகுதி. கீழ்நோக்கி சற்று தொலைவு கடந்து போனால் சமவெளி பாகமும் 11 மைல் கடந்தால் ஒரு சிற்றூரும் உண்டு என்பதை அறிந்து. நகரத்துக்கு சென்று இரவை அங்கு கழிப்பது என்று தீர்மானித்தோம். ஆனால் பசியை எங்களால் மேற்கொள்ளமுடியவில்லை. நடந்து சென்றுகொண்டிருக்கும்போது ஒரு சிறு டீ கடையை கண்டோம். கடையின் முன் நின்று ஒரு சிறு பாட்டு பாடினோம். கடையை சுற்றி சில மக்கள் அரட்டை அடித்துகொண்டு இருந்தனர். டீ வாங்க என்னிடம் காசு இல்லை. சகோ. ஹில்டனிடமும் பணம் இல்லை. அதன் பிறகுதான் நான் சகோதரனிடம் கூறினேன். நான் ஒரு பாட்டு பாடுகிறேன். பாட்டின் முடிவில் அவர்கள் ஆளுக்கு ஒரு டீ கூடவா கொடுக்கமாட்டார்கள்? என்றேன். பசியோடு பசியாக சுவிசேஷமும் கூறி முடித்தோம்.

சுவிசேஷம் கூறி முடிப்பதற்கும் எங்களுக்கு முன்பாக டீ பாத்திரத்தை கடைக்காரர் கழுவி வைப்பதற்கும் சரியாக இருந்தது. ஆம் **டீ தீர்ந்துவிட்டது.** அந்த பசி நேரம் அந்த சூழ்நிலை எங்களுக்கு எப்படி இருந்தது தெரியுமா ? சரி இனி இங்கு நின்று பிரயோஜனம் இல்லை என்று எண்ணி நடையை கட்டினோம்,

வானம் இருண்டது, இடி இடித்தது, மழையும் பெய்தது. மழையில் நனைந்தவாறே கொஞ்ச தூரம் ஓடுவது பிறகு நடப்பது இப்படியாக எங்கும் நிற்காமல் மழையில் நனைந்தபடி போய் கொண்டேஇருந்தோம். நான் மழை கோட்டும், நீர் புகாத தொப்பியும் அனிந்து இருந்தேன். பைபிளை மழை கோட்டுக்கு உள்ளே தண்ணீர் நனையாமல் அணைத்துக்கொண்டேன். சகோ.ஹில்டனிடம் ஒரு குடை மட்டும் இருந்தது. அதை பிடித்துக்கொண்டு இருவரும் ஒருவருக்கொருவர் பேசாமல் நடந்து போய்கொண்டிருந்தோம்.

மழை மிகவும் கனமாக பெய்ததால் ஒரு மரத்தடியில் சற்று இளைப்பாறினோம். எனக்கு பசி தாங்க முடியவில்லை. அழுகை வரும்போல் இருந்தது. மழையில் அழுதாலும் மற்றவர்கள் கண்டுபிடிக்க முடியாது. நான் பசி தாங்க முடியாமல் என் ரெக்சின் **தொப்பியில்** மழை தண்ணீரை பிடித்து குடித்தேன். பிறகு மறுபடியும் நடந்தோம். ஒரு இடத்தில் நாங்கள் நின்று மறுபடியும் ஜெபித்தோம். மறுபடியும் ஓட்டமும் நடையுமாக சென்றோம். அப்போது ஒரு **மூங்கில் ஏற்றிய லாரி** வந்தது. எங்களை பார்த்தவுடன் டிரைவர் வண்டியை நிறுத்தி, லாரி டிரைவர் என்னைப் பார்த்து சார் உள்ளே ஏறுங்கள் என்றான். உள்ளே முன்பக்கம் என் ஒருவனுக்குதான் இடம் இருந்தது. சகோ. ஹில்டன் விருவிருவென்று **லாரியின் மேல் பகுதியில் மூங்கில் கட்டுகள்மீது** ஏறிவிட்டார்., மழை சற்று ஓய்ந்தது. வண்டியும் புறப்பட்டது. என்னைப்பற்றி பரவாயில்லை. ஆனால் சகோதரன் ஹில்டன் பட்டபாடுகள் அதிகம். அதை அன்று இரவு என்னோடு பகிர்ந்துகொண்டார். அவர் பட்ட வேதனையை விவரித்தபோதுதான் அவர் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார் என்று அறிந்து மிகவும் மிகவும் வருத்தப்பட்டேன். லாரி போகும்போது அவர் சரீரம் மரக் கிளைகளில் உராய்ந்தது முதுகில் சிராய்ப்புகள் ஏற்பட்டது. வண்டி மலைப்பாங்கான வழியில் செல்வதால் வளைந்து வளைந்து செல்லும்போது அவர் வலப்பக்கமும், இடப்பக்கமும் உருண்டு புரண்டு மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார் என்று அறிந்தேன்.

லாரியின் உள்ளே நடந்த ஒரு தமாஷ், லாரி போய்க்கொண்டிருக்கும்போது டிரைவர் என்னை ஒரு கேள்வி கேட்டார். சார் உங்கள் ஜீப் எங்கே என்றார். நானும் **இல்லை** என்று மட்டும் கூறி அதைப்பற்றி மேலும் விவரிக்காமல் விட்டுவிட்டேன். ஒரு வார்த்தையும் அவரிடம் நான் பேசவில்லை. லாரியில் ஊர் போய் சேர்ந்தபின் பிரயாண கூலியாக அந்த டிரைவர் எங்களிடம் பணம் ஏதாவது கேட்டால் என்ன செய்வது? இந்த யோசனையிலேயே அமர்ந்திருந்தேன். கூடவே ஒரு குட்டி ஜெபமும் செய்துகொண்டேன். வண்டி காடுகளை கடந்து **டெங்கனிக்கோட்டை** என்ற ஊருக்கு வந்துசேர்ந்துவிட்டது. டிரைவர் வன இலாகா அலுவலகத்தின் வாசலில்

வண்டியை நிறுத்தி, எங்களை இறக்கிவிட்டு அந்த லாரி டிரைவரும் இறங்கி வந்து என் கையில் **ரூபாய் நோட்டை** திணித்தான். அவன் எனக்கு உபகாரம் செய்கிறான் என்று எண்ணி வேண்டாம், மிகவும் நன்றி என்று கூறி ரூபாய் நோட்டை அவனிடமே கொடுத்துவிட்டேன். இன்னும் கொஞ்சம் வற்புறுத்தி இருந்தால் என் பசிக்கு அந்த பணத்தை வாங்கி இருப்பேனோ ? நான் அறியேன். நல்ல வேளை அந்த டிரைவர் பணத்தை திருப்பி தன் பாக்கட்டில் வைத்துக்கொண்டு என்னிடம் மரியாதையாக **சலாம்** வைத்து விடைபெற்றான். அவன் ஏன் எனக்கு **பணம்** கொடுக்கவேண்டும் ? எனக்கு ஏன் எனக்கு **சலாம்** வைக்க வேண்டும் ?.

சகோ ஹில்டன் கூறிய பிறகுதான் உண்மை தெரிந்தது. அந்த லாரி டிரைவர் என் மிலிடெரி மழை கோட்டையும், என் தொப்பியையும் கண்டு நான் **வன இலாகா அதிகாரி** என்று நினைத்து எனக்கு அத்தனை மரியாதையும் செய்து இருக்கிறார். அப்போதுதான் ஆரம்பத்தில் அந்த டிரைவர் **ஜீப் இல்லையா** என்று என்னிடம் கேட்டதின் அர்த்தம் புரியவந்தது. எப்படி அவர் நினைத்தாரோ போகட்டும் அதிகம் நடக்காமல் ஊர் வரை கொண்டுவந்து சேர்த்து விட்டாரே அதுபோதும். **டெங்கனிக்கோட்டைக்கு** நாங்கள் சேரும் போது இரவு மணி 9-30 அந்த நாட்களில் அந்த ஊரில் ஒரு கிறிஸ்தவர்கூட கிடையாது. அந்த காலத்தில் கிறிஸ்தவர் கோவிலும் அங்கு கிடையாது.

எனக்கு தெரிந்த ஒருபோலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கிறிஸ்தவர் ஒருவர் மாற்றலாகி டெங்கனிக்கோட்டையில் இருப்பதாக சில வருடங்களுக்குமுன் நான் கேள்விப்பட்டேன். சரி அவரையாவது போய் காணலாம் என்று போலீஸ் ஸ்டேசனில் விசாரிக்க வந்து சேர்ந்தோம். போலீஸ் ஸ்டேசனில் ஏதோ விழா நடப்பதுபோல அறிந்தோம். அங்கு நின்றிருந்த கான்ஸ்டபிள் ஒருவரை அணுகி **சாமுவேல்** சப்-இன்ஸ்பெக்டரை காணவேண்டும் என்றேன். உடனே அவர் பதட்டத்துடன், அடேடே அவர் இப்போதுதான் ஜீப்பில் போகிறார் என்றார். திரும்பி எப்போது வருவார் என்று கேட்டோம். திரும்பி வர மாட்டார். அவர் இப்போதுதான் இடம் மாற்றலாகி (Transfer) போகிறார். இப்போதுதான் அவருக்கு விருந்துகொடுத்து அனுப்பினோம் என்று அவர்கள் கூறியதுகேட்டவுடன் என் வயிறு பன்மடங்கு எரிய ஆரம்பித்தது.

நாங்கள் சோர்ந்துபோய் ஒருவரை ஒருவர் பார்த்து செய்வதறியாமல் நின்று விட்டோம். பிறகு அந்த போலீஸ்காரரையே கேட்டோம். இங்கு யாராவது உங்களுக்கு தெரிந்த **கிறிஸ்தவர்** உண்டா என்று கேட்டோம். இந்த ஊரில் அப்படி யாரும் இல்லை, எனினும் தாசில்தார் ஆபிஸில் ஒரு **கிறிஸ்தவ கிளர்க்** மாற்றலாகி வந்திருக்கிறார். அவர் ஆபீஸிலேயே தங்கி இருக்கிறார் என்றார். உடனே அங்கு சென்றோம். அவரோ அங்கு இல்லை. அவர் சினிமா முடிந்தவுடன் வந்து சேர்ந்தார். அப்போது மணி 11-00. நாங்கள் அவரை சந்தித்து எங்கள் ஊழியங்களையும் நிலைமைகளையும் அவரிடம் சொன்னோம். அவரிடம் எங்கள் பசியை மாத்திரம் குறிப்பிடவில்லை. அது எங்களுக்கு ஒரு வரட்டு கவுரவப் பிரச்சனையாக இருந்தது.

அப்போது சாப்பிட்டீர்களா என்று அந்த கிளர்க்கே எங்களிடம் கேட்பார் என்று காத்திருந்தோம். அவர் ஒரு வார்த்தையும் அதைப்பற்றி கேட்கவில்லை. காரணம் அவர் அப்போதுதான் சாப்பிட்டு முடித்து பல்லை குச்சியால் குத்திக்கொண்டிருந்தார்.

பிறகு அவர் கூறினார், அரசாங்க ஆபீஸில் வெளி ஆட்களை தங்க வைக்கக்கூடாது, ஆனால் இங்கு பஞ்சாயத்து கமிஷினர் (BDO) ஒரு **கிறிஸ்தவர் இருக்கிறார்.** அவர் சமீபத்தில்தான் மாற்றல் ஆகி வந்திருக்கிறார், அவர் வீட்டில் கொண்டுபோய் விடுகிறேன். இந்த இராத்திரியில் 12-00 மணிக்கு அவர் வீட்டு கதவை தட்டுவதால் அவர் எப்படி சலித்துக்கொள்வாரோ என்று கூறியபடி எங்களை அழைத்து சென்றார். அப்போது நாங்கள் மறுபடியம் ஒரு சிறு ஜெபம் செய்து கொண்டோம்.

## தட்டுங்கள் திறக்கப்படும்

BDO அவர்களின்வீட்டு கதவை தட்டியவுடன் திறக்கப்பட்டது. எங்களை அழைத்து வந்தவர் மட்டும் உள்ளே போனார். எங்களை பற்றி கூறியிருப்பார். சற்று நேரத்தில் BDO அவர்கள் அவர் வெளியே வந்து எங்களை உள்ளே அழைத்தார். அந்த ஆபீசர் எங்களை அன்போடு வரவேற்றது எத்தனை ஆறுதலாக இருந்தது தெரியுமா? ஆனால் அவருக்கோ தொண்டையில் சத்தம் இல்லை. காரணம் அப்போதுதான் CMC வெல்லூர் ஆஸ்பத்திரியில் **தொண்டை ஆபரேசன்** செய்து திரும்பி உள்ளார். ஆகவே அவர் பதிலை ஒரு **சிலேட்டில் எழுதி** சகரியாவைபோல எழுத்து மூலமாக எங்களை பற்றி விசாரித்தார்.

எங்கள் நிலைமையை விளக்கினோம். பேசிக்கொண்டிருக்கும்போது எங்கள் பேச்சை இடையில் அவர் நிறுத்தி அதுசரி நீங்கள் சாப்பிட்டீர்களா? என்று எழுதி கேட்டார்பாருங்கள்! அப்பாடா இந்த கேள்விக்குப்பின்தான் எங்கள் வயிறு சில்லேன்று தனிய ஆரம்பித்தது. உடனே அதிகம் விவரிக்காமல் சங்கோஜப்படாமல், வெட்கப்படாமல் சாப்பிடவில்லை என்று இருவரும் கோரஸ்ஸாக ஒரே வரியில் கூறினோம். உடனே அவர் மனைவியோ சோறு இல்லையே, அடடா, இப்போதுதான் பாத்திரத்தை கழுவிவைத்தேன் என்று கூறி பரிதாபமாக கைவிரித்தார்.

உடனே BDO அவர்கள் எங்களை கூட்டி வந்த அந்த கிளாரக்கையே கூப்பிட்டு எங்களுக்கு சாப்பாடு வாங்கி வரும்படி கடைக்கு அனுப்பினார். அரை மணி கழித்து திரும்பி வந்த அவர், எந்த கடையிலும் சாப்பிட ஒன்றும் இல்லை. ஒரே ஒரு கடையில் **பரோட்டா** மட்டும் உள்ளது. தொட்டுக்கொள்ள ஒன்றும் இல்லை என்று பதில் கூறினார். உடனே வேறு வழி இல்லாமல் எங்களையும் அவரோடு கூடவே அனுப்பி அந்த புரோட்டாவும் தீருவதற்குள் அதை இவர்களுக்கு வாங்கி கொடுத்து, **வாழைப்பழம்** சாப்பிட வைத்து கூட்டிக்கொண்டுவா என்று கட்டளை கொடுத்தார். எப்படியோ ஒரு வழியாக வயிரார சாப்பிட்டோம். களைப்பு நீங்க BDO அவர்களின் வீட்டிலேயே நன்றாக படுத்து உறங்கினோம். மறுநாள் காலையில் எழுந்து எங்கள் குடிசைக்கு செல்ல அவரே லாரி ஒன்றை ஏற்பாடு செய்து அனுப்பி வைத்தார். கார்த்தருக்கு ஸ்தோத்திரம்.

### இக்கட்டான மற்றொரு பிரச்சனையின் அனுபவம்:

நான் மிஷனரி ஊழியத்துக்கு புறப்பட்டபோது என் பெற்றோருக்கு நான் மிஷனரி பணிக்கு செல்வதாக அறிவிக்கவில்லை. வழக்கம்போல் கன்வென்ஷனில் பேச வெளியூருக்கு புறப்படுவது போல புறப்பட்டேன் உண்மையறிந்தால் பெற்றோர் என்னை ஊழியத்துக்கு அனுமதிக்க மாட்டார்கள் என்ற பயம் காரணமாகவும் மலைக்கு போய் சேர்ந்த உடன் கடிதம் எழுதி அறிவிக்கலாம் என்ற எண்ணத்திலும் புறப்பட்டுவிட்டேன்.

ஆரம்ப காலத்தில் எனக்கும் சகோ. ஹாரீஸ் ஹில்டன் அவர்களுக்கும் ஸ்தாபனம் ஒரு தொகையை நிர்ணயம் செய்து மாதா மாதம் ஒரு தொகை FMPB அலுவலகத்திலுருந்து எங்களுக்கு அனுப்பிக்கொடுத்தது. அதை ஒரு ஆள் கொண்டுவந்து கொடுப்பான். அதில் ஒரு சிறு தொகையை என் சாப்பாட்டுக்கு வைத்துக்கொண்டு மீதி முழுவதும் **என் வீட்டுக்கு** அனுப்பிவிடுவேன்.

### மிஷனரி ஊழியத்துக்கு புது பிரச்சனை

சில மாதங்களிலேயே FMPB அலுவலகத்திலிருந்து எங்களுக்கு சம்பளம் கிடைப்பது நின்றுபோனது, நான் . வீட்டுக்கு அனுப்ப வேண்டிய பணம் அனுப்பமுடியாததால் என் வீட்டில் பிரச்சனைகள் உருவாகியது. ஆனால் சகோ ஹில்டன் அவர்களின் மனைவி டேனிஷ்பேட்டை பெத்தேலில் **ஆசிரியையாக** வேலை செய்துவந்ததால் அவர் ஓரளவு சமாளித்தார்.

என் பெற்றோருக்கு நான் **ஒரே மகன்** என் மூத்த சகோதரிகளில் திருமணமானவர்கள்போக மீதி இருந்த இரண்டு சகோதரிகளையும் என் பெற்றொரையும் நான் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு எனக்கிருந்தது. அன்று எனக்கு சொந்த வீடு அல்லது நிலம் எதுவும் இல்லை. மாதா மாதம் **வீட்டு வாடகை** அனுப்பியாக வேண்டும். குடும்ப சாப்பாட்டு பிரச்சனையை தீர்த்தாக வேண்டும். இவையெல்லாம் நான் அனுப்பிய என் உதவி பணத்திலிருந்துதான் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் இரண்டு மாதங்கள் தொடர்ந்து பணம் FMPB அனுப்பவில்லை.

என் தகப்பனாரிடமிருந்து வாரா வாரம் போஸ்ட்கார்டு வரும் அதில் வீட்டு வாடகை அனுப்பவில்லை குடும்பம் மிகவும் கஷ்டப்படுகிறது. என்றெல்லாம் எழுதிக்கொண்டிருப்பார்.

என் தகப்பனர் எனக்கு பெரியமலை விலாசத்துக்கு எழுதிய அந்த **போஸ்ட்கார்டை** அப்படியே போட்டோ காப்பி எடுத்து ஜாமக்காரனில் சில வருடங்களுக்குமுன் வெளியிட்டிருந்தேன். நாட்கள் செல்ல செல்ல வீட்டு பிரச்சனை மிக அதிகமாகியது என்தகப்பனார் ஒரு கடிதத்தில் வீட்டில் இப்போது யாரும் காப்பி, டீ குடிப்பதில்லை அவை நிறுத்தியாயிற்று என்று எழுதினார். மற்றொரு வாரம் எனக்கு எழுதிய கடிதத்தில் வாய்க்கு ருசியான குழம்பு கறி பொரியல் எவைகளும் இப்போது நம் வீட்டில் சமையல் செய்வதில்லை, **தயிர்** வாங்குவதும் **நிறுத்திவிட்டோம்,** இப்படி ஒவ்வொரு வாரமும் என் தகப்பனாரின் கடிதம் காணும் போதெல்லாம் என் உள்ளம் துடிக்கும், துவளும். ஆகவே இப்போது என் தகப்பனாரின் கடிதம் வந்தவுடன் அதை படிக்காமலே கிழித்து எறிந்துவிட ஆரம்பித்தேன். காரணம் என் மனம் மாறி ஊழியத்தை விட்டு ஊருக்கு திரும்பிவிடுவேனோ என்ற பயம் எனக்குள் ஏற்பட்டது.

இந்த சமயத்தில்தான் என் நண்பன் ஒருவன் எனக்கு கடிதம் எழுதியிருந்தான் அதில் உன் தாய் உடல் நிலை சரியில்லாமல் இருக்கிறார் வைத்தியம் செய்ய வழியில்லாத நிலையை நான் கண்டேன். த்ன் சொந்த குடும்பத்தை காப்பாற்றும் பொறுப்புள்ள ஸ்தானத்தில் உள்ள நீ இப்படி பொருப்பை மறந்து எப்படி ஊழியம் செய்ய முடிந்தது என்றெல்லாம் கோபத்தோடு எனக்கு எழுதியிருந்தான்.

இதையறிந்தபோது காலமெல்லாம் எனக்காக கஷ்டப்பட்ட என் பெற்றோரின் கடைசி காலத்தில் அவர்களை சமாதானத்துடன், எந்த குறைவும் வைக்காமல் குறிப்பாக பட்டினி போடாமலாவது நல்ல விதமாக அவர்களை வாழ வைக்க முடியவில்லையே! என்று வருந்தினேன்.

இந்த நிலையில் குடிசையில் நாங்கள் ஏற்கனவே மொத்தமாக வாங்கி வைத்திருந்த ஒரு மூட்டை அரிசியும் தீர்ந்துபோயிற்று. ஆரம்பத்தில் இரண்டு நாள் பட்டினி பின் அது நீண்டு போயிற்று. அதை நாங்கள் உபவாசம் என்று மாற்றி ஜெபித்துக் கொண்டிருந்தோம்.

### ஒரு ஊசி மருந்தின் கிரயம் ஒருபடி ஆரிய மாவு (ராகி)

ஊழியத்தில் பட்டினியாக இருக்க நேர்ந்தாலும் எங்கள் ஊழியம் தடைபடவில்லை, மூன்று நாட்கள் சாப்பிடாமல் இருந்தும், எப்போதும்போல் ஒவ்வொருநாள் அதிகாலையில் அந்த கடும் குளிரிலும், சுற்றியுள்ள கிராமங்களுக்கு செல்லுவோம். வீடுவீடாக தனித்தனி ஆத்துமாக்களை சந்தித்து இயேசுவை அறிவிப்போம். சிறுபிள்ளைகளுக்கு செய்கை பாடல் பாடி மகிழ்விப்போம். பைபிள் கதைகளை சொல்லிவைப்போம்.

நாங்கள் இயேசு தெய்வத்தை அவர்களுக்கு பலமுறை அறிமுகப்படுத்தியதால் அந்த கிராம மக்கள் எங்களை இயேசு என்றே அழைத்தனர். பழக்கமான ஒரு கிராமத்துக்கு ஒருமுறை நாங்கள் சென்றோம். தூரத்தில் நாங்கள் வருவதைக்கண்ட சிறு பிள்ளைகள், நாங்கள் வருவதை கிராம தலைவனுக்கு அறிவித்தனர்.

**ஏசு சாமி** வருகிறார்கள் என்றுதான் அவர்கள் அறிவித்தனர். எத்தனை இயேசு வருகிறார்கள் என்று அந்த தலைவன் கேட்க, இரண்டு ஏசு சாமிகள் வந்துகொண்டு இருக்கிறார்கள் என்று பிள்ளைகள் கூறினார்கள். அத்தனை விவரம் புரியாத மக்களாக அவர்கள் இருந்தார்கள்.

## ஆதிவாசிகள் பார்த்த முதல் தமிழ் எழுத்து

வயது முதிர்ந்த ஒருவரை அணுகி, உங்களுக்கு தமிழ் படிக்கத் தெரியுமா? என்று கேட்டோம். தெரியாது. ஆனால் ஊர் மக்கள் பார்த்த **முதல் தமிழ் எழுத்து** இங்கு ஒரு இடத்தில் உள்ளது. அதை நான் அறிவேன் என்றார்கள். எங்களை அங்கு அழைத்து சென்றார். அது ஒரு சிறு கோவில். உள்ளே ஒரு கல்லை வைத்து விக்ரகமாக வணங்குகிறார்கள். மேலே கூரைக்கு பதில் இரண்டு நீள தகரங்கள் சாய்த்து வைத்துள்ளார்கள். அதில் ஒரு தகரத்தில் அந்த மக்கள் தங்கள் வாழ்க்கையிலே கண்டதான முதல் தமிழ் எழுத்தைக் காட்டினார்கள். அது MGR வாழ்க என்று சுண்ணாம்பு மட்டைக்கொண்டு எழுதப்பட்டிருந்தது. முதன்முதல் நாங்கள்தான் **ஏசு என்ற பெயரை** தமிழ் எழுத்தில் அறிமுகப்படுத்தவந்தோம் என்று நினைத்தால். எங்ளையும் முந்திக்கொண்டது அந்த கவச்சியான மூன்றெழுத்து ! என்னத்தை சொல்ல !

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளினூடே கையில் பணம் இல்லாததால் சாப்பாட்டுக்கு வழி கண்டு பிடிக்க முற்பட்டோம். வியாதியஸ்தரை தேடி அலைந்தோம். காரணம் வைத்தியம் செய்தால் சாப்பிட ஏதாவது கிடைக்குமே அதனால் வியாயஸ்தர்களை தேடினோம். அப்போதும் வியாதியுள்ள ஒரு பெண்ணுக்கு வைத்தியம் செய்ய சிலர் என்னை அவளிடம் அழைத்துச் சென்றார்கள்.

இந்த கிராமத்தில் உள்ளவர்களுக்கு வியாதி முற்றினால் கட்டிலோடே சேர்த்து வியாதியஸ்தரை தூக்கிக்கொண்டு மலையைவிட்டு கீழே இறங்கி மாரன்டஹள்ளி டவுனுக்கு சென்று வைத்தியம் செய்வது வழக்கம். கொஞ்சம் வசதி உள்ளவர்களானாலும் மூங்கில் வெட்டும் தொழிலை வியாபாரமாக கொணடவர்களாலேயும்தான் இப்படிப்பட்ட முறையில் வியாதியஸ்தரை சிகிச்சை செய்ய அடிவாரம் கொண்டுசெல்லமுடியும். அப்படி கொஞ்சம் வசதியுள்ளவர்களில் ஒருவரைதான் நான் சந்தித்தேன். ஆனால் அந்த கிராமத்தில் அந்த காலத்தில் யார் கையிலும் பணம் இல்லை. எல்லா விஷயமும் **பண்டம் மாற்று** முறையில் தான் நடக்கும்.

இப்போது நானும் அந்த பெண்ணின் வியாதிக்கு ஊசி போட்டு பணத்துக்குப் பதில் எங்கள் பசிக்கு அவர்களிடம் இருந்த ஆரிய மாவு (கேழ்வரகு) வாங்கினேன். (ராகி பவுடர் என்று கவுரமாக கூறிக்கொள்ளலாம்) ராகி மாவு வாங்கிய உடனே ஊழியத்தை முடித்து எங்கள் குடிசைக்கு திரும்பினோம். கிடைத்த ராகி மாவை சமைக்க ஆரம்பித்தோம்.

அந்த மாவை பிசைந்து உப்பு போட்டு வெங்காயம் இல்லாமல், அப்படியே எருமாமட்டை (வரட்டி) போல தட்டி வேகவைத்து சாப்பிட்ட அன்றைய அனுபவத்தை என்னால் மறக்க முடியவில்லை.

அதையும் சப்பாத்தி ரூபத்தில் வட்டமாக எடுக்கதான் முயன்றோம். ஆனால் அந்த ரொட்டிக்கும், தோசைக்கல்லுக்கும் என்ன பாசமோ,சுறண்டினால்கூட அது கல்லைவிட்டு வரவில்லை **உருண்டடையாகத்தான்** எடுத்து சாப்பிட்டோம். வீட்டில் எத்தனை சொகுசாக ருசியாக ஆகாரம் வைத்தாலும் குறைப்பட்டுக்கொண்டே சாப்பிட்ட எனக்கு கர்த்தர் நல்ல ஒரு பயிற்சி கொடுத்தார். ஆனால் அப்போதைக்கு அந்த ராகி ரொட்டி அத்தனை ருசியாக இருந்தது. இந்த சம்பவங்கள் நடந்து இப்போது (2016) 49 வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் அன்று கர்த்தருக்காக நாங்கள் ஊழியத்தில் அனுபவித்த **ஆரம்ப கால** அனுபவங்கள் எங்களுக்கு

ஆவிக்குரிய இன்பத்தை கொடுத்தது. இதற்குதான் உலகம் கொடுக்கக்கூடாத சந்தோஷம் அல்லது சமாதானம் என்று வேதம் அழைக்கிறது.

**எங்களுக்கு சம்பளம் கிடைக்காததின் காரணம்:**

ஆரம்ப கால கட்டத்தில் FMPB யில் உண்டான இந்த பணபிரச்சனைக்கு FMPB காரணமல்ல. மாதா மாதம் ஊழியத்தை தாங்குகிறேன் என்று கூறியவர்கள், சில மாதங்கள் காணிக்கையை அனுப்பாமல் போனதே காரணமாகும். இதனால் பல மிஷனரிகள் பட்டினி கிடக்க நேரிடும் என்பதை இவர்கள் உணரவில்லை.

FMPB ஸ்தாபனம் ஆரம்பிக்கப்ட்ட ஆரம்ப காலத்தில் FMPB ன் பொறுப்பாளர்கள் சிலரின் மெத்தனமும் இப்பிரச்சனைக்கு காரணமாக இருந்தது.

ஆனால் அதே சமயம் FMPB **ஸ்தாபனம் நடத்தியவர்கள்** சும்மாயிருக்கவில்லை. விசுவாசிகளிடம் காணிக்கை பெற அரும்பாடுபட்டார்கள். FMPB ஸ்தாபன பொறுப்பாளர்கள் யாரும் **அக்காலத்தில் முழுநேர பொருப்பில்** FMPB யை நடத்தவில்லை. எல்லா பொருப்பாளர்களும் உலக வேலையில் அமர்ந்திருந்தார்கள்.

ஆங்ககாங்கே முதன்முதல் **கிதியோனியர் முகாம்** என்ற பெயரில் ஊர்ஊராக கூட்டம் நடத்தி பணம் இல்லாத நிலையை அறிவித்தார்கள், அதன்பிறகுதான் ஓரளவு காணிக்கையை மக்கள் FMPBக்கு அனுப்ப ஆரம்பித்தனர்.

ஆரம்ப காலங்களில் சகோ. **எமில்** அவர்கள் சாயர்புரம் **போப்ஸ் கல்லூரியில்** லெக்சரராக இருந்துகொண்டே இடைவெளியில்லாது மிஷனரி கூட்டங்களையும் கிதியோனியர் முகாம்களையும் ஊர் ஊராக நடத்திக்கொண்டிருந்தார். தனக்கு கல்லூரியில் கிடைத்த மாத சம்பளத்தில் FMPBக்காக ஆங்காங்கே தானே நோட்டீஜ் அச்சடித்து நடத்திய கூட்ட செலவுகளையும் இதர செலவுகளையும் செய்ததால் வீட்டுக்குகூட அவர் தன் சம்பள பணம் கொடுக்காமல் போனதால் அவரின் பெற்றோரின் கோபத்துள்ளானதை நான் அறிவேன். அப்போது அவர் தகப்பனார் சாயர்புரத்தில் CSI ஆலய ஆயராக ஊழியம் செய்துகொண்டிருந்தார். நான் அவரை நேரில் சந்தித்தபோது தன் மகன் எமில் FMPB ஊழியத்துக்காக இரவு பகலும் அலைவதையும், தன் சொந்த பணம் FMPBக்காக செலவழிப்பதையும் அவர் என்னோடு பகிர்ந்துகொண்டார். ஆக அன்று FMPB ஸ்தாபனத்தில் உள்ள எல்லோருமே மிஷனரி ஊழியம் தடைபட்டுவிடக்கூடாதே என்பதற்காக காணிக்கை சேகரிக்க காற்றுபோல் அலைந்தார்கள்.

ஆகவே FMPBயை காணிக்கையால் தாங்கிய அன்றைய **விசுவாசிகளின்** மெத்தனம்தான் அன்று நாங்கள் அனுபவித்த பண குறைகளுக்கும், பட்டினி கிடந்தததற்கும் மற்றெரு காரணம் என்பேன்.

☐ ஒரு ஊழியம் சீராக வளர, சீராக நடக்க, **சீரான திட்டமிடல் மிகவும் தேவை** . மிஷனரி பணியை தாங்கும் விசுவாசிகள் தொடர்ந்து திட்டமிட்டு சீராக காணிக்கை உதவிகளை அனுப்பினால்தான் மிஷனரிகள் பட்டினி கிடக்காமல் ஊழியம் செய்யமுடியும். இதை இப்போதுள்ள விசுவாசிகளும் உணரவேண்டும்.

☐ அன்று நாங்கள் **பெரியமலை** பணித்தளத்திலிருந்து பணம் இல்லாத காரணத்தால் வேறு வழி இல்லாமல் எல்லோரும் சொந்த ஊருக்கு திரும்ப வேண்டியதானது. அதன்பின் FMPB சில மாதங்களில் சீரான திட்டம் வகுத்து பணம் சேகரித்து திட்டமிட்டு புதிய சில ஏற்பாடுகளை செய்து **மறுபடியும் மிஷனரிகளை** பெரியமலைக்கு அனுப்பினார்கள். இந்த முறை நான் பெரிய மலைக்கு போகவில்லை. சகோ. ஹாரிஸ் ஹில்டன் மட்டும் வேறொரு ஊழியருடன் பெரியமலை ஊழியத்தை தொடர்ந்தார். அப்போதும் **அவர் மனைவி பணிதளத்துக்கு செல்லவில்லை.** அவர் தொடர்ந்து **ஆசிரியை** பணியைத்தான் செய்தார். ஆகவே ஹாரிஸ்

ஹில்டனுடன் பெரிய மலைக்கு **அவர் மனைவியுடன்** செல்லவில்லை. அன்றைய ஆரம்ப நாட்களில் மிஷனரியின் மனைவி வேறு வேலை எதுவும் செய்யாமல் கணவருடன் இணைந்து மிஷனரி பணி மட்டும் செய்யவேண்டும் என்று சட்டம் இயற்றப்படவில்லை. அநேக வருடத்துக்குபின்தான் FMPBக்கான சட்டதிட்டங்கள் இயற்றினர். எந்த ஒரு மிஷனரியும் மனைவியுடன் இணைந்து பணித்தளம் செல்ல வேண்டும். மிஷனரியின் மனைவி வேலைக்கு போக கூடாது. இப்படி நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. **(இந்த விவரத்தை அறைகூவலில் பெரியமலை சரித்திரத்தை எழுதுகிறேன் என்று பொய்யான தகவலை எழுதினாரே அவரிடம் கூறுங்கள்).**

☐ அதன்பின் நானோ மறுபடியும் **என் ஆஸ்பத்திரி** தொழிலை தொடங்கினேன். **என் பெற்றோரை என் குடும்பத்தை** காப்பாற்ற சொந்த ஆஸ்பத்திரியை பல இடங்களில் நிறுவினேன். அதன்பின் 1970ல் சேலம் அரசாங்க ஆஸ்பத்திரியில் பணியாற்றும் இரட்சிக்கப்பட்ட பெண்ணும் CSI ஆயருடைய மகளுமானவரை நான் மனமுடித்தேன். அவர் சேலம் **அரசாங்க ஆஸ்பத்திரியில்** பணியாற்றிக் கொண்டிருந்தார். என் மனைவியின் சம்பளம் என் குடும்பத்தை காப்பாற்ற போதுமானதாக இருந்தது. ஆகவே என் மனைவியும் என்னை முழுநேர பணிக்கு ஊக்குவித்த காரணத்தால் 1976ம்வருடம் என் வேலையை **ராஜினாமா** செய்து நான் நடத்திக்கொண்டிருந்த சொந்த **கிளீனிக்கை மூடிவிட்டு** 1976ம் வருடம் முதல் **முழுநேர ஊழியனாக** மறுபடியும் ஊழிய களத்தில் இறங்கினேன்.

**மறுபடியும் மிஷனரி ஊழியம் :** சகோ. எமில் அவர்களை FMPBயை விட்டு விலகும் மனஸ்தாப சூழ்நிலை FMPBயில் உருவானது. அப்படி FMPBயைவிட்டு விலகி **விஸ்வவாணி வானொலி** ஊழியத்தை அவர் துடங்கியபோது உடனே FMPB யில் உள்ள பழமைவாதிகள் சிலர் எமில் **மிஷனரி தரிசனத்தை** இழந்து வெளிநாட்டு பணஉதவியோடு சுகமான **வானொலி ஊழியத்தை** செய்ய பின்மாறிப் போய்விட்டார் என்றெல்லாம் FMPB யில் உள்ளவர்களே கூறி அவரை அவமானப்படுத்தினார்கள். ஆனால் அவரின் **மிஷனரி தரிசனம்** ஒருநாளும் அவரை விட்டு நீங்கவில்லை என்பதைத்தான் தாமதமாகத்தான் அவர்கள் உணர்ந்தார்கள். அவர் உள்ளத்தின் **மிஷனரி பாரம்** அவரைவிட்டு நீங்காமல் **விஸ்வவாணி வானொலி** ஊழியத்தையே **விஷ்வவாணி மிஷனரி ஸ்தாபனமாக** மாற்றி ஏராளமான மிஷனரிகள் வட இந்திய காடுகளுக்கு அனுப்ப தொடங்கிவிட்டார். விஷ்வவாணி சபைகளும் காடுகளுக்குள் எழும்பின. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

' அதுபோல் நானும் FMPBயைவிட்டு விலகியபின் மறுபடியும் டாக்டர் தொழிலை என் குடும்பத்துக்காக தொடங்கி நடத்தினாலும் **என் வைத்திய தொழிலோடு** கன்வென்ஷன் ஊழியத்தையும் செய்து, **மிஷனரி பணியையும்** செய்துவந்தேன். 1976ம் வருடம் நான் முழு நேர ஊழியத்தில் இறங்கியவுடன் மறுபடியும் **மிஷனரி பணியை தொடங்கினேன். ஆதிவாசிகள் மத்தியில்** மட்டும் அந்த மிஷனரி பணியை நானும் சில டாக்டர்களும் இணைந்து **மிஷனரி ஊழியத்தை** தொடங்கி நடத்தினோம்.. அப்படி முதன்முதல் மிஷனரி பணியை மேற்கு இந்திய மலைக்காடுகளில் **நிலம்பூர்** மலைகளில் வாழும் **சோலை நாயக்கன்மார்** என்ற **அரை நிர்வாணமாக** உள்ள ஆதிவாசிகளிடம் சுவிசேஷம் அறிவித்தேன். அப்படி நானாக சில விசுவாசிகளையும் என்னுடன் சேர்த்துக்கொண்டு **மலை ஊழியத்தையும்** தொடங்கினேன். அன்று அந்த நிலையில் நானே ஆரம்பித்ததுதான் **(Tribal Mission) டிரைபில் மிஷன்** என்ற **மிஷனரி ஸ்தாபனமாகும்.** அது இப்போது கோயமுத்தூர் அருகே உள்ள **ஆனைக்கட்டி** மலையிலும் தலைமை அலுவலகமாக கேரளாவில் **பெரும்பாவூர்** என்ற இடத்திலும் அந்த மிஷனரி பணித்தளம் அமைந்துள்ளது.

☐ எனக்கு கர்த்தர் கொடுத்த எச்சரிப்பில் மிக முக்கியமானது. **ஸ்தாபனம்** அல்லது **சபை** என்று எனக்காக எதையும் **ஆரம்பிக்க கூடாது** என்ற எச்சரிப்பாகும்!. அதை இந்த கட்டுரையின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டுள்ளேன். அதன் அடிப்படையில் அந்த **டிரைபில் மிஷனை** நடத்த **கமிட்டியை** உருவாக்கி, **டிரஸ்ட்டையும் உருவாக்கி** இன்று அந்த மிஷனரி ஸ்தாபனத்தை பிரபல **இருதய வியாதி நிபுணர் டாக்டர் முரளிதர்,** MD அவர்களை **பொதுச் செயலாளராக்கி** அவரிடம் **ஒப்படைக்கப்பட்டது. அவர்** அந்த ஊழியத்தை மிக மிக நன்றாக வளர்த்துவிட்டார். இந்த **டிரைபில் மிஷன்** ஸ்தாபனத்தின் கமிட்டியிலோ, மிஷனரி டிரஸ்டிலோ, சொசைட்டியிலோ எதிலும் **என் பெயர்** இருக்காது. Tribal Missionல் நான் வெறும் **ஆலோசகராக** மட்டும் அவ்வப்போது ஈடுபாடு கொள்கிறேன். அதோடு கர்த்தர் எனக்கு கொடுத்த மிக முக்கிய அழைப்பு. **சபைகளை வசனத்துக்கு நேராக திருப்புவது** என்பதாகும். எனக்கு கர்த்தரால் கொடுக்கப்பட்ட **விசேஷ பிரசங்க தாலந்தை** அதற்காக பயன்படுத்தி அதோடு மிஷனரி பணியையும் இணைத்து நானே மாதம் தோறும் **ஒருவாரம் முழுவதும்** அதற்கென்று ஒதுக்கி இந்திய மாநிலத்தில் ஆதிவாசிகள் உள்ள மலைகளை தெரிந்தெடுத்து நான் காடுகாடாக மலை மலையாக கிராமம் கிராமமாக மாதத்தில் ஒரு வாரம் முழுவதும் காடுகளில் கூடாரம் அடைத்து தங்கி **இலவச வைத்தியம்** செய்து சுவிசேஷமும் அறிவித்து இன்று வரை அந்த ஊழியத்தை தனிப்பட்ட முறையில் செய்து வருகிறேன். இந்த 75வயதிலும்(2016) மலை ஊழியத்தை ஆதிவாசிகள் மத்தியில் இலவச மருத்துவத்துடன் சுவிசேஷமும் இணைத்து அறிவித்து வருகிறேன். மாதத்தில் 3 வாரம் **நாட்டிலும்** மாதத்தில் ஒரு வாரம் முழுவதும் **காட்டிலும்** ஊழியத்தை செய்து வருகிறேன். இதற்கு எனக்கு எந்த பணசெலவும் இல்லை. நிறைய டாக்டர்கள் தங்களுக்கு கிடைக்கும் சேம்பிள் மருந்துகளை எங்களுக்கு மாதா மாதம் அனுப்பி உதவுகிறார்கள். என்கூட இலவச மருத்துவ முகாம்களுக்கு மிஷனரி சுவிசேஷ ஊழியத்தில் உதவி செய்ய வரும் டாக்டர்களும் **கைநிறைய பணம்** சம்பாதிக்கிறவர்கள் ஆகும். ஆகவே பண விஷயத்தில் எங்களுக்கு குறைவே உண்டாவதில்லை.

## பத்திரிக்கை ஊழியம்

சபைகளில் நான் பிரசங்கிக்கும் கன்வென்ஷன் மூலமாக என்னோடு தொடர்பு கொள்ளும் மக்களை தவறான ஊழியர்களை அடையாளம்காட்டி எச்சரித்து வசன மூலமாக அவர்களுக்கு ஆலோசனைக் கூறி நடத்துவதற்காகவே தொடங்கப்பட்டதுதான் **ஜாமக்காரன்** பத்திரிகை ஊழியமாகும். இந்த ஊழியங்களை இப்போதும், (2016) 47வருடங்களாக தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறேன். ஜாமக்காரன் பத்திரிகையிலேயே **தவறான உபதேசங்களை** சுட்டிக்காட்டுவது, தவறான **ஊழியர்களை** தவறு செய்யும் **பிஷப்மார்களைகூட** கூட வாசகர்களுக்கு அடையாளம் காட்டி அவர்களை எச்சரிக்கும் ஊழியமாக அது மாறியது. இதன் மூலம் பல விரோதிகளை சம்பாதித்தேன், பெரும்பாலான **பிரசங்கிமார்களுக்கும், பிஷப்மார்களுக்கும்** என்னை அறவே பிடிக்காது.

### பெரியமலை மிஷனரி பணிதளத்தில் அடையாளம் தெரியாதஅளவு மாற்றம்:

☐ முதன் முதலில் நான் மிஷனரியாக ஊழியம் செய்த **பெரியமலை** என்ற இடத்தில் இப்போது ஒரு நல்ல **ஆலயம்** கட்டப்பட்டிருக்கிறது. மிஷனரி ஊழியர்கள் தங்க நல்ல வசதியுள்ள **வீடுகள்** கட்டப்பட்டுள்ளது. இப்போது நல்ல தியாக சிந்தையுள்ள **டாக்டர் ஒருவர்** பெரிய ஆஸ்பத்திரியை **பெரிய மலையிலேயே** தொடங்கி வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கிறார். இப்போது அந்த **பெரியமலை** காடுகளில் ஆதிவாசிகள் நிறையபேர் **இயேசுவை ஏற்றுக்கொண்டு** கையில் **வேத புஸ்தகத்தை சுமந்து** அந்த காட்டில் உள்ள **ஆலய ஆராதனைக்கு** நடந்து செல்வதும் **சன்டே ஸ்கூலுக்கு** பிள்ளைகள் வருவதும் **கண்கொள்ளா** காட்சியாக

கண்டு நாங்கள்பூரித்து போனோம். சகோ.பி.சாமுவேலுக்கும், சகோ. **எமிலுக்கும்,** சகோ. **ஹாரிஸ் ஹில்டனுக்கும்** அன்றைக்கு அடிக்கடி அவர்கள் மனதில் ஏற்பட்ட ஆசை என்னவென்றால் **பெரியமலையில் ஆலயமணி ஓசை** எழுப்ப வேண்டும். **ஆலய ஆராதனை** நடக்க வேண்டும் என்பதாகும். அவர்களின் ஆசை இப்போது பூர்த்தியானது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கர்த்தர் பெரிய மலையில் வாழும் **அந்த மக்களை நேசித்ததால்தான் இத்தனை பெரிய ஆவிக்குரிய** மாற்றங்கள் அங்கு நிகழ்ந்தது என்றால் அது மிகையாகாது.

☐ அன்பானவர்களே என் ஆரம்ப ஊழிய பாதையில் எனக்கு ஏற்பட்ட கஷ்டமான அனுபவங்கள் ஒவ்வொன்றையும் என்னை இயேசுவின் சிலுவையை நோக்கி என்னை மிக நெருங்கவைக்கும் படிக்கட்டுகளாக மாறியதை நினைத்து என் தேவனை துதிக்கிறேன். துதித்துக்கொண்டேயிருக்கிறேன்.

நான் மட்டும்தான் இத்தகைய அனுபவம் பெற்றேன் என்று எண்ண வேண்டாம். என்னைவிட **அதிகம் துன்பம் சகித்தவர். கஷ்டப்பட்டவர்கள்** பலர் மிஷனரி பணிதளத்தில் இப்போதும் உண்டு. அவர்களையெல்லாம் உங்கள் ஜெபத்தில் நினைப்பீர்களாக. FMPBயில் ஆரம்பத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட மிஷனரிகள் ஒவ்வொருவரும் **கோதுமை** மணிகளாகும். **தியாகத்தின் சிகரங்களை எட்டியவர்களாகும்**. ஒவ்வொரு மிஷனரியும் **ஜெப வீரர்களாகும்.** சொந்த ஊரைவிட்டு,அவர்கள் செய்துகொண்டிருக்கும் மிகப்பெரிய அரசாங்க வேலைகளையும் விட்டு, **சிலர் லட்சங்கள் சம்பாதிக்கும்** தொழிலையும்விட்டு FMPB ஸ்தாபனம் தரும் சிறு தொகைகளைப்பெற்று தங்கள் பிள்ளைகளை உயர்ந்த படிப்பு படிக்க வைக்கவும் பணமில்லாமல், வீட்டை மறந்து, உறவை மறந்து **ஆத்துமாக்களை தேடி** அலையும் அத்தகைய தியாகிகள்நிறைந்த மிஷனரிகள்தான் இன்றுபெரும்பான்மையாக FMPBயில் மிஷனரிகளாக பணியாற்று கிறார்கள். இவர்களை FMPBஸ்தாபனம் மதிக்கிறேதோ, இல்லையோ. நம் ஆண்டவர் ஒரு நாளும் இவர்களின் **ஊழிய தியாகத்தை** மறக்கவேமாட்டார். நிச்சயம் பரலோகத்தில் இவர்களுக்கென்று ஒரு தனி வரவேற்புண்டு. நான் பலவருடங்களாக பெரும்பாலான FMPBயின் பணிதளங்களுக்கு நேரில் சென்று அங்குள்ள மிஷனரிகளோடே தங்கி ஊழியம் செய்து, அவர்களோடு படுத்து உறங்கி அவர்களின் கஷ்டங்களை அறிந்து அவர்களின் உண்மையான **ஊழிய தேவைகளை அறிந்து அவைகளை** நான் செல்லும் இந்திய மாநிலங்களிலெல்லாம், வெளி நாடுகளிலெல்லாம் அதைப்பற்றி **அறிவிக்காமல்** வந்ததே கிடையாது.

அன்று FMPBயை முதன்முதல் ஆரம்பித்த தேவன் தெரிந்தெடுத்த அந்த அற்புதமான, ஆரம்பகால **தேவ மனிதர்களுக்காக தேவனை துதிக்கிறேன்.**

☐ FMPB, மட்டுமல்ல Tribal Mission மட்டுமல்ல இதுபோல மிஷனரிகளை அனுப்பும் **எல்லா மிஷனரி ஸ்தாபனங்களையும்** உங்கள் ஜெபத்தில் நினைவு கூறுங்கள்.

**மேலே கூறிய என் அனுபவத்தில் நான் படித்துக்கொண்ட பாடம்.**

☐ ஊழிய அழைப்பை அறிந்தவுடன் உணர்ச்சி (Emotion) அடிப்படையில் எதையும் யோசிக்காமல், குடும்ப நிலையை உணராமல், **மிஷனரி ஊழியத்தை** செய்ய அவசரப்பட்டு அன்று நான் எடுத்த என் **அவசர தீர்மானம்** பிழையானது என்பதை தாமதமாகத்தான் நான் உணர்ந்தேன்.அந்த தவறை நீங்கள் யாரும் செய்துவிடவேண்டாம்.

☐ குடும்பத்தை நடத்த **மாற்று ஏற்பாடு** ஒன்றுமில்லாதிருக்க குடும்பத்தை அனாதைப்போல விட்டு மிஷனரி பணிக்கு போனது பிழையானது என்பதை உணர்ந்தேன்.

☐ மிஷனரி ஊழிய அழைப்பை பெற்றவுடன் **கர்த்தரின் பாதத்தில்** காத்திருக்காமல் அல்லது முழுநேர ஊழியத்துக்காக உணர்ச்சிவசப்பட்டு வெளியே வந்தேன். குடும்பத்துக்குலிருந்து, **ஊழிய வாசல் திறக்கும்வரை** காத்திருக்காமல் மிஷனரி ஊழியம் செய்ய செயலில் இறங்குவது பிழையாகும். சொந்த குடும்பத்தை சரியாய் நடத்தாதவன் சபையை எப்படி நடத்துவான் 1 தீமோ 3.

☐ **டாக்டர் பில்லி கிரஹாம் அவர்கள் தன் புத்தகத்தில் இப்படி எழுதியுள்ளார்.**

**முதலாவது** கடளுக்கு நாம் நம் இருதயத்தில் நாம் வாழ்க்கையில் இடம் கொடுக்க வேண்டும்.

**இரண்டாவது** குடும்பத்துக்கு இடம் கொடுக்க வேண்டும்.

**மூன்றாவது** ஊழியத்துக்கு இடம் கொடுக்க வேண்டும். இதை வாசித்தபிறகுதான் நான் ஊழியத்தில் **திடமான, சரியான** தீர்மானத்தை எடுத்தேன்.

☐ 11 பேதுரு 1:10 எழுதியபடி அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கவேண்டும் என்பதை அன்று நான் யோசிக்கவில்லை அது நான் செய்த பெரும் பிழை. அன்று நான் பெற்ற அழைப்பு **உணர்ச்சிபூர்வமானதா ? என்றும்** உண்மையில் என்னை **முழு நேர ஊழியத்துக்குத்தான்** கர்த்தர் அழைத்தாரா? என்பதை யும் குறித்து ஜெபத்தில் நான் கேட்கவில்லை.

**ஆத்தும பாரம்** கொண்டதின் அடிப்படையில்தான் நான் இந்த ஊழியத்தை தெரிந்துகொண்டேனா என்பதை எல்லாம் நான் யோசிக்கவில்லை.

☐ **ஊழிய அழைப்பு** கிடைத்தாலும் அவரவருக்கு கர்த்தர் பகிர்ந்தளித்த **தாலந்துகளின்** அடிப்படையில்தான் ஊழியத்தை தெரிந்தெடுக்கவேண்டும் என்பதையும் யோசிக்கவில்லை. கொடுத்த தாலந்துகளின் அடிப்படையில்தான் தேவன் நம்மிடம் கணக்கு கேட்பார்.

ஒரு தாலந்து பெற்றவன் அந்த தாலந்தை உபயோகிக்காதபடி கொடுத்த தாலந்தின் கணக்கின் அளவில் **லாபம் இல்லாமல்** எஜமானிடம் திரும்ப கொடுத்ததால்தான் எஜமானனுக்கு கோபம் உண்டானது.

அவனனுக்களித்த தாலந்தின் அடிப்படையில்தான் கர்த்தரும் நம்மிடம் லாபத்தை எதிர்பார்ப்பார்.

☐ **ஊழியங்களில்** வித்தியாசங்கள் உண்டு. ஆகவே ஊழியத்தில் இறங்கு முன் என் **அழைப்பு** என்ன ? என் **தாலந்து** என்ன ? என் **தகுதி** என்ன ? போன்ற முக்கிய விஷயங்களை இயேசுவின் பாதத்தில் காத்திருந்து தீர்மானம் எடுப்பது மிக முக்கியம்.

பலர் மேலே குறிப்பிட்டபடி யோசிக்காமல் **சொப்பனத்தில்** கர்த்தர் என்னை ஊழியத்துக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று கூறினார் என்றும் ஒரு **ஊழியக்காரன் தீர்க்கதரிசனமாக** கூறினார் என்றும் கூறி சிலர் ஊழியத்தில் இறங்குவது மிகவும் ஆபத்தானது. இப்படிப்பட்டவர்களைத்தான் பிசாசு இயேசுவின் பெயரில் அவனையே தன்னுடைய (பிசாசின்) ஊழியனாக மாற்றி உபயோகிக்கிறான்.

**என்** தாய் செய்த நேர்ச்சையால் நான் **ஊழியத்துக்கு** போகிறேன் என்றும் பல விதமாக கூறி ஊழியத்துக்கு வந்துவிடுகிறார்கள். தன் தகுதிகளைப்பற்றி யோசிக்காமல், **ஆத்துமாக்களை** குறித்து **தங்கள் தனி ஜெபத்தில்** எவ்வளவு நேரம் ஜெபித்தோம் என்ற ஊழியத்தின் முழு**முதல் தகுதியைப்பற்றி** யோசிக்காமல், ஊழியத்துக்கு வந்துவிடுவது மிகவும் ஆபத்து. கர்த்தரின் அழைப்பை உறுதிபடுத்திக் கொள்ளாமல் தங்களுக்கு சம்மந்தமில்லாத ஊழியத்தை செய்து பலர் சாட்சிகெட்டு பரிதவிக்கிறார்கள். இப்படிபட்டவர்கள்தான் கிறிஸ்தவ வீடுகளைத்தேடி **ஜெபம் செய்து பண**த்தை காணிக்கையாக வாங்கும் **ஆவிக்குரிய பிச்சைகாரர்களாய்** திரிகிறார்கள்.

☐ ஆனால் அதே சமயம் **சுவிசேஷம் அறிவிக்க** அழைப்பு வரும் என்று யாரும் காத்திருக்க வேண்டியதில்லை. அழிந்துபோகிற ஆத்துமாக்களை பற்றி **பாரம் மனதில் உண்டானால் போதும்** அழைப்பு வந்தாயிற்று என்றுதான் அர்த்தம்.

## ஊழியம், ஊழியக்காரர்கள், ஊழிய ஸ்தாபனம்

உண்மையான ஊழிய ஸ்தாபனங்கள் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளது அல்லது நிறுத்தப்பட இருக்கிறது. என்றால் அதற்கு

***காரணம் 1*** பணம் இல்லாதது.

***காரணம் 2*** வெளிநாட்டு பணத்தை எதிர்பார்த்து அல்லது ஊழியத்தை அல்லது சபையை ஆரம்பிப்பது ஆகும்.

☐ நம் விசுவாசிகளை மட்டும் நம்பி ஊழியம் ஆரம்பிக்கும்போது அவர்கள் தொடர்ந்து மிஷனரி பணிக்கு, ஊழியத்துக்கு கொடுப்பேன் என்று வாக்குறுதி கொடுத்தவர்கள் அல்லது கையுயர்த்தி காட்டியவர்கள் சில மாதங்கள் மட்டும் பணம் அனுப்பிவிட்டு நிறுத்திவிடுவார்கள். இப்படிபட்டவர்களினாலும் ஊழியம் பாதியில் நிறுத்தப்பட காரணமாகிறது.

***காரணம் 3*** **ஸ்தாபனத்தை** நடத்துகிவர்களும் மிஷனரிகளின் **குடும்ப நலத்தில்** அல்லது அவர்கள் பெற்ற பிள்ளைகளின் படிப்பு அல்லது வைத்திய விஷயத்தில் அக்கறை கொள்வதில்லை. அதற்கு சரியான திட்டம் செய்வதில்லை.

***காரணம் 4*** ஊழியர்கள் **சரியான அழைப்பு** பெறாமல் மிஷனரிகளாக வந்தது தான் **மிஷனரி ஊழியம்** வளராததற்குகான ஒரு முக்கிய காரணமாகும்.

# CSI டையோசிஸ் மிஷனரி ஊழியம்:

‘ CSI போன்ற போன்ற சபைகள் மூலமாக நடத்தப்படும் மிஷனரி ஊழியங்கள் இன்று **சரியான பலன் இல்லாமல்** போனதற்கு காரணம் **மிஷனரிகளை தெரிந்தெடுப்பதில்** உள்ள தவறாகும். பல மிஷனரிகள் சபையில்உள்ள இரட்சிக்கப்படாத சிலரின் சிபாரிசு அடிப்படையில் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

இவர்களில் பலர் உலகப்பிரகாரமான வேறு வேலை கிடைக்காதுபோனதால் மிஷனரி பணிக்கு வருகிறார்கள். CSI யில் **பெரும்பாலான** மிஷனரிகளுக்கு **மனம் திரும்புதலின் அனுபவமே இல்லை**. இது அவர்களுடன் நான் பேசி பழகி அறிந்த உண்மையாகும்

**CSI**யில் பல மிஷனரிகளுக்கு **வேத அறிவும் இல்லை**. இப்படிப்பட்டவர்கள் சிலர் ஆதிவாசிகள் பணித்தளத்தில் ஆதிவாசி பெண்களிடம் தகாதமுறையில் நடந்து ஊழியத்துக்கு கெட்ட பெயர் உண்டாக்குகிறார்கள்.

**CSI சபை மக்கள் மிஷனரிபணிக்கு மற்றவர்களைவிட பணத்தை** அள்ளி கொடுக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் அனுப்பப்பட்ட ஊழியர்கள் ஊழியத்துக்கு தகுதியற்றவர்களாக இருப்பதால் **பணித்தளங்கள்** பெருகினாலும், **அங்கு ஆலயங்கள்** கட்டப்பட்டாலும் ஏராளமான மக்கள் **ஞானஸ்தானம்** பெற்றாலும் **சபை விசுவாசிகளிடம் தரம்** இல்லாமல் போகிறது.

‘ FMPB. IEM. BYM இப்படிப்பட்ட மிஷனரி ஸ்தாபங்களில் ஊழியம் செய்யும் **மிஷனரிகளின் தகுதிகளோடு** CSIயிலிருந்து அனுப்பப்பட்ட மிஷனரிகளின் தகுதிகளை கோபப்படாமல் சற்று **ஒப்பிட்டுப் பாருங்கள் CSI மிஷனரி ஸ்தாபனங்களில்** ஆவிக்குரிய நிலை மிக மோசமாக இருப்பது உங்களுக்கு நன்றாக விளங்கும்

***காரணம் 5*** ஊழியர்களை பணத்தில் தாங்கினால் மட்டும் போதாது. **அந்த ஊழியர்களை** அவர்களை **அனுப்பும் ஸ்தாபனங்களை** தினசரி தங்கள் ஜெபத்திலும் காணிக்கைகளிலும் தாங்க வேண்டும்.

அப்படி ஜெபிக்காதது எல்லா ஊழிய தடைகளுக்கும் காரணமாகிறது. 1 பேதுரு 4:7. அதன் விளைவு தன் வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு **முழு நேர ஊழியத்துக்கு** வந்தவர்களின் வயிறு பட்டினி, குடும்பம் **கஷ்டத்தை** அனுபவிக்கிறது.

பாதியிலேயே அவர்கள் தங்கள் மிஷனரி ஊழியத்தையும் விடவேண்டி வருகிறது. **ஸ்தாபனமும் இயங்காமல் நிறுத்தப்படுகிறது.** ஜெபிப்போமாக.

☐ மேலே நான் ஊழியம் செய்த **FMPB** மிஷனரி ஸ்தாபத்துக்கு பண உதவிசெய்ய விரும்புபவர்கள் FMPB ஊழியத்தைக்குறித்து மேலும் விவரங்கள் அறிய விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : **FMPB 29. High School Road, Ambathore, Chennai - 600053**

☐ **மலையாள பத்திரிகை அறைகூவல்** தேவையானோர் தொடர்புகொள்ள **FMPB, Chennai** முகவரியில் தொடர்பு கொள்ளவும்

☐ **FMPB,** மிஷனரி ஸ்தாபத்தின் **முதல் மிஷனரி** விவரம் தெளிவாக அறிய

**Dr. Rev. DANIEL,**
**C/o FMPB**
**29, High School Road,**
**Ambatore,**
**Chennai- 600053 என்ற விலாசத்தில் விசாரிக்கவும்.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# ஆஸ்ட்ரேலிய ஊழியம்

கர்த்தர் அனுமதித்தால் 2016 அல்லது 2017 அக்டோபர் மாதம் ஆஸ்ட்ரேலிய ஊழியம் செய்ய திட்டமிட்டிருக்கிறேன். இன்னும் ஆஸ்ட்ரேலிய ஊழிய தேதிகள் உறுதிபடுத்தவில்லை.

# ஆல மரம் போல வளர்ந்த FMPB


ஆசியாவிலேயே மிக அதிகமான மிஷனரிகளை அனுப்பிய ஒரே ஸ்தாபனம் FMPB ஆகும். ஆயிரக்கனக்கான ஆத்துமாக்கள் நிறைந்த ஆலயங்களை ஆதிவாசிகள் மத்தியில் எழுப்பிய ஸ்தாபனம் FMPB ஆகும்.

லட்சக்கணக்கான வடஇந்திய மக்கள் வருடா வருடம் ஞானஸ்ஞானம் பெற்று சபையில் இணைந்துகொண்டிருக்கிறார்கள். இத்தனை சிறப்புக்கும் **அஸ்திபார காரணகர்த்தாக்கள் இரண்டு** பேர்கள்


1) டேனிஷ்பேட்டை **Bro .P. சாமுவேல்** அவர்கள்

2) சகோ. **எமில் ஜெபசிங்** அவர்களாகும்.

இவர்களின் அயரா முயற்சி, இந்திய மக்களை குறித்த ஆத்தும பாரம் இவர்களை அயராது இரவும் பகலும் இந்தியா எங்கும் பிரயாணம் செய்ய வைத்தது. பாரதம் கிறிஸ்துவை அறியவேண்டும் என்ற பாரம் FMPBயின் ஆரம்ப ஸ்தாபகர்கள் அத்தனை பேர்களை காட்டிலும் இந்த **இருவரின் முயற்சியும், இவர்கள் சிந்திய வியர்வை துளிகளும், இவர்கள் விட்ட கண்ணீரும், இவர்களின்** அயராத அலச்சலும் **விவரிக்க முடியாததாகும்**. இவர்களின் சிறப்பான கடின உழைப்புக்காகவும் இவர்களின் மிஷனரி பாரத்துக்காகவும் நாம் இந்த இரண்டு பேர்களுக்காகவும் நன்றி கூறி தேவனை துதிக்க கடமைப்பட்டுளளோம். நாம் இருக்கும்வரை நம் தேசம் இருக்கும்வரை கிறிஸ்தவர்கள் யாராலும் மறக்ககூடாத நபர்கள் சகோ. **P. சாமுவேல்**, சகோ. **எமில் ஜெபசிங்** என்றால் அது மிகையாகாது. இவர்கள் மூலமாக எழும்பிய மிஷனரிகள் ஆயிரம் ஆயிரங்களாகும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.



டேனிஷ்பேட்டை **Bro .P. சாமுவேல்** அவர்கள் –




சகோ. **எமில் ஜெபசிங்** அவர்கள்.

FMPBயின் ஆரம்பால சரித்திரமும், பிரச்சனைகளும்
நேரம் கிடைக்கும் போது எழுதுவேன்.

# முன்னாள் பொது செயலர். Rev.சைமன்பொன்னையா அவர்கள் கடிதத்தின் சில பகுதிகள்:

கடந்த ஜனவரி 2016 ஜாமக்காரனில் Rev.**சைமன் பொன்னையா** என்பதற்கு பதில் சாம் பொன்னையா என்று தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. தவறாக இருந்த ஜாமக்காரனில் குறிப்பீட்ட அந்த நபர் யார்? என்று தவறாக இருந்தாலும் எல்லாரும் அறிந்துக் கொண்டனர்.



**Rev.சைமன் பொன்னையா**

**Rev.சைமன் பொன்னையா** அவர்கள் எனக்கு எழுதிய மறுப்பு கடிதத்தை ஜாமக்காரனில் வெளியிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

அதில் சில வரிகளை மட்டும் எடுத்து எழுதுகிறேன். வாசகர்கள் **Rev..சைமன் பொன்னையா** அவர்களைப் பற்றியும் அவரின் ஆவிக்குரிய நிலைப்பாடுபற்றியும், தெளிவாக விளங்கிக்கொள்வார்கள் என்பது உறுதி.

அவர் எழுதிய கடிதத்தின் ஆரம்பத்திலேயே **பொய்யின் உச்சத்துக்கு** Rev..சைமன் பொன்னையா அவர்கள் சென்றுவிட்டார் என்பதை அறிந்துக் கொள்ளலாம்.

அவர் எனக்கு எழுதிய கடிதத்தில் எழுதுகிறார், நீங்களும்(டாக்டர்.புஷ்பராஜ்), நானும்(சைமன் பொன்னையா) **எங்கேயும் சந்தித்ததே இல்லை.**

' திரு.**சைமன் பொன்னையா** அவர்கள் தாம்பரம் ஜெபக்குழு தலைவர்களிடத்தில் பல லட்சம் கடனாக வாங்கி திருப்பி கொடுக்காமல் மறைந்து வாழ்ந்ததைக்குறித்து FMPB தலைமைக்கு ஜெபக்குழு தலைவர்கள் புகார் எழுதியுள்ளனர். இவரைப்பற்றி எழுதிய புகார் கடிதத்தின் நகல்களை நான் எடுத்துக்கொண்டு இத்தனை அருமையாக பிரசங்க தாலந்துகளை பெற்ற சைமன் பொன்னையாவைப்பற்றி வந்த புகார்களை என்னால் நம்ப இயலவில்லை. இவர் கிதியோனியர் முகாமில் பேசினாலோ, SCAN கூட்டத்தில் பேசினாலோ பல லட்சங்கள் FMPB ஊழியத்துக்கு பிரசங்கம் கேட்ட மக்கள் பணத்தை கொட்டி கொடுப்பார்கள். அத்தனை நயமாக பேசக்கூடியவர். FMPB மிஷனரி பணித்தளங்கள் முழுவதையும் அனைத்து மிஷனரிகளைப்பற்றியும் மிக நன்றாக அறிந்து வைத்து கூட்டத்தில் பிரசங்கிப்பார். இவரைப்போல் FMPB ஊழிய தேவைகளைப்பற்றிய புள்ளி விவரங்களை கூறுபவர்கள் யாரும் இருக்கமுடியாது என்ற அளவு பிரசித்தம் பெற்றவர்.

அப்படியே மிக மிக பொய் பேசுபவரும் இவராகத்தான் இருக்கமுடியும். சொன்ன வாக்கை நிறைவேற்றாதவர். பணத்தை ஒவ்வொரு ஜெபக்குழு தலைவர்களிடமும் எப்படியாவது கறந்துவிடுவார். அது மிஷனரி ஊழியத்துக்கல்ல, தன் சொந்த மகன் தேவைக்காக ஆகும். **மிஷனரி ஊழியத்துக்கு காணிக்கை சேர்ப்பதுபோல்** கூடவே தன் மகனுக்காக தான்

பல இடத்தில் வாங்கிய லட்சக்கணக்கான கடன்களை அடைப்பதற்காக தேவையான பணத்தையும் சேர்த்துவிடுவார். அதனால் வெளிநாட்டில் FMPB சார்பில் இனி Rev.சைமன் பொன்னையாவை அனுப்பினால் ஒரு தம்பிடிக்கூட FMPBக்காக கொடுக்க மாட்டோம் என்று தலைமைக்கு கடிதம் எழுதியவர்கள் சிலர் என்னோடு பேசினார்கள்.

**Rev.சைமன் பொன்னையா** அவர்கள் வாங்கிய கடன்கள் இவரைப்பற்றி தலைமைக்கு வந்த புகார்களை விசாரிக்க சென்னை அம்பத்துார் தலைமை அலுவலகத்திற்கு நான் நேரில் சென்றேன். என் பெயர் பதிவு செய்து இவரை எதற்காக சந்திக்கிறேன். பேட்டி எடுக்கப்போகிறேன் என்பதை அறிவித்தபிறகுதான், அவருடைய அறையில் நேருக்குநேர் அமர்ந்து பேசினேன். முன்னதாக அரைமணி நேரம் பேசுவேன் என்று அவரிடமே அப்பாயின்மென்ட் வாங்கினேன். ஆனால் அன்று சுமார் 1.1/2 மணி நேரம் அவரோடு பேசும் நிலை வந்தது. இத்தனை காரியம் நடந்தும் இவரோ என்னை **இதுவரை பார்த்ததே இல்லை** என்கிறார், என்றால் இவர் எத்தனை துணிகரமான பொய் பேசுகிறார் என்று விளங்குகிறதா?. இதற்கு அலுவலக சகோதரிகள் சாட்சி. அன்றைய பொது செயலருக்கு இவரோடு பேசப்போவதைப்பற்றி அறிவித்தபின்தான் சைமன் பொன்னையாவை சந்தித்தேன். இத்தனை சாட்சிகள் இருக்க நான் **கடனே வாங்கவில்லை** என்று இவர் சத்தியம் செய்வதுபோல் நான் உங்களை(டாக்டர்.புஷ்பராஜ்)இதுவரை பார்த்ததே இல்லை என்று இவர் எழுத எத்தனை பயங்கர துணிகரமான பொய் பேசிவிட்டார். இத்தனை துணிகரமாக **பொய் பேசும்** இவர் மற்ற எந்த காரியத்திலும் நிச்சயம் உண்மையாக இருக்கமாட்டார் என்பது தெளிவு. ஆகவே பணஊழல் சம்பந்தமாக இவர் மேல் எழுந்த குற்றச்சாட்டில் உண்மை உண்டு என்பது தெளிவாக தெரிகிறது.

FMPBயின் **உண்மை கண்டறியும்** உயர்மட்ட குழுமுன் இவர் நின்றதும், விசாரணை நடந்ததும், FMPBயில் உள்ள அனைவருமே அறிவார்களே!, இவர் **ஏன் உண்மை கண்டறியும்** குழுமுன் நின்றார்?.

எனக்கு எழுதிய கடிதத்தில் **நான் எந்த நபரிடமும் கடனே வாங்கவில்லை என்றும்** வங்கி மூலம் மட்டுமே கடன் பெற்றிருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

Rev.சைமன் பொன்னையா விரும்பினால் தாம்பரம், சென்னையின் மற்ற இடங்களில் உள்ள FMPB **ஜெபக்குழு தலைவர்கள், SCAN வியாபாரிகள், FMPB விசுவாசிகள்** அத்தனை பேர்களிடம் இவர் வாங்கிய கடனை இன்றுவரை திரும்பி கொடுக்கவில்லை. சைமன் பொன்னையா அவர்கள் சம்மதித்தால் இவர் யார் யாரிடம் எவ்வளவு லட்சம் கடன் வாங்கினாரோ அவர்களின் கடிதத்தை விலாசத்தோடு ஜாமக்காரனில் வெளியிட தயாராக இருக்கிறேன். சகோ.சைமன் பொன்னையா சம்மதிப்பாரானால் அடுத்த ஜாமக்காரனிலேயே வெளியிடுகிறேன்.

பணம் கொடுத்தவர்கள் அத்தனை பேரும் நல்ல விசுவாசிகள் **ஊழியக்காரன் தானே** போனால்போகிறது என்று இவருக்கு கடன் கொடுத்தவர்கள் பல நபர்கள் விட்டுக் கொடுத்துள்ளார்கள். அவர் **பொய்** கூறியதை அறிந்ததும் அத்தனை பேரும் எனக்கு போன் செய்து இப்படிப்பட்ட ஆட்களை FMPB உயர் பதவியில் வைத்ததே தவறு என்று கோபத்தில் அறிவித்தார்கள். ஆரம்பத்தில் இவருக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்த Dr.Rev. JTK.DANIEL இவரை எப்படியாவது பொது செயளாலராக்கவேண்டும் என்று மிகவும்

முயன்றார். அப்படியே இவரின் பொய் வாழ்க்கையை அறிய **Dr.Rev.சாம் கமலேசன்** இவரின் மிகவும் நெருங்கிய நண்பர் ஆகும். அவரும் இவரை பொது செயளாலராக்க முயன்றார். ஆனால் Dr.DANIEL அவர்களும், **Dr.Rev சாம் கமலேசன்** அவர்களும் அந்த முயற்சியில் தோற்றுபோனார்கள். அன்றைய தேர்வில் சைமன் பொன்னையா தோற்கடிக்கப்பட்டார். யாரும் அவரை தெரிந்தெடுக்க விரும்பவில்லை.

பண விஷயத்தில் இவர் பலவீனமானவர் என்பதை அறிந்துதான் இவரை தள்ளி வைத்தனர். ஆனால் மூன்றாம் முறை பொது செயளாலர் தேர்வில் இவரின் சாமர்த்தியத்தால் பலரை கெஞ்சியும்தான் இப் பதவியை பெற்றார். அதன் விளைவு FMPBக்கு கெட்ட பெயர் இவரால் உண்டானது. பண ஊழலில் இவர் அகப்பட்டார். பதவியிலிருந்து டிஸ்மிஸ் செய்யபடவேண்டியவரை அவராக ஓய்வு பெற்றதைபோல அறிவித்தார்கள். இப்போது **புது பொதுசெயலர்** பதவிஏற்பு விழாவில் இவரை புகழ்ந்த பெரியவர்களைப்பற்றியும், எனக்கே இப்போது சந்தேகம் வருகிறது. சைமன் பொன்னையாவை புகழாமல் விட்டிருக்கலாம். வானளாவ இவரை புகழ்ந்தது FMPBயில் இன்னும் பலவீனங்கள் நீங்கவில்லை என்று விளங்குகிறது.

புதிய பொதுசெயலர் நூற்றுக்குநூறு **தெய்வபயம்** உள்ள அற்புதமான ஊழியர். FMPBபொது செயலர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர். ஆனால் இவர் தலையில் வைத்து அபிஷேகிக்க **பால்தினகரனை** தவிர வேறு யாரும் கிடைக்கவில்லையா?.

**கள்ள ஊழியர்கள்,கள்ள தீர்க்கதரிசிகள்** பட்டியலில் இடம் பெற்ற பால்தினகரனை கை வைக்க அனுமதித்தது யாருடைய ஏற்பாடு? யாரை திருப்திப்படுத்த இந்த ஏற்பாடு செய்யப்பட்டது என்று தெரியவில்லை?.

சகோ.தினகரனும்,தம்பி.பால்தினகரனும் FMPB ஊழியத்தை 1972லிருந்தே வெறுப்பவர்கள் என்பது கிறிஸ்தவர்கள் அறிவார்கள். காணிக்கை தனக்கு கிடைக்காமல் FMPBக்கு பெரும்அளவு போகிறதே என்ற ஆதங்கம் உள்ளவர்கள் இவர்கள் ஆகும்.

அன்றைய ஒரு கூட்டத்தில் **சகோ.தினகரன்** கூறினார். ஒருவரை தேடி வடஇந்தியா போகும் நபரின் மிஷனரி ஸ்தாபனத்தை மக்கள் தாங்குகிறார்கள். ஆனால் நான்(தினகரன்) பல லட்ச ஜனங்களை ஒரே மைதானத்தில் கூட்டி சுவிசேஷம் அறிவிக்கிறேன். என் ஊழியம் சிறந்ததா?, மிஷனரி ஊழிய ஸ்தாபனம் சிறந்ததா?என்று வெளியரங்கமாக கேட்டாரே?. அப்படிப்பட்டவர்கள் உண்மையான பாரத்தோடு புது பொதுசெயலரின்மேல் கை வைத்திருப்பார்களா? இப்போதைய FMPBயின் **புதிய தலைவர்** அவர்கள் பல **சபை தலைவர்களை,**பல கிறிஸ்தவ ஸ்தாபனங்களை அனைத்து செல்வதினால் அந்த **சபைகளின்** ஆதரவை பெற நாடுகிறார் என்று நினைக்கிறேன். நோக்கம் நல்லது, ஆனால் தகுதியியல்லாத ஒருவர் கை வைத்து ஜெபித்தது எனக்கு ஏற்புடையதாக இல்லை.

**சகோ.எமில்ஜெபசிங்** அவர்கள் காலத்திலிருந்து அதன்பின் பொதுசெயலராக தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அனைவரும் FMPB தலைமை அலுவலகத்தில் வைத்து உண்மையாய் மிஷனரி பாரம் உள்ளவர்களும், உண்மையாய் ஜெபிப்பவர்களும் **ஜெபகுழு தலைவர்களின் உபவாச ஜெப** ஆயத்தத்துடன் அந்த அபிஷேக ஆராதனை நடைபெற்றது. ஆனால் இந்தமுறை **அரசியல்வாதிகளின் கூட்டம்போல்** அபிஷேக ஆராதனை நடத்தப்பட்டது. என்னைப்போல் பலரின் மனதில் வேதனையை ஏற்படுத்தியது. நல்லவேளை

**அரசியல் மந்திரிகள்** யாரும் அபிஷேக ஆராதனைக்கு வரவில்லை.

சகோ.சைமன் பொன்னையா அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் கடைசியாக எழுதிய வார்த்தை **எங்கள் FMPB இயக்கத்தின் தலைவர்கள் பொருப்பாளர்கள்** உங்கள் **மீது நடவடிக்கைகளை** எடுப்பார்கள் என்று எழுதி முடித்துள்ளார். சகோ.**சைமன் பொன்னையா** அவர்களின் ஆசை நிறைவேறாது.

சகோ.சைமன் பொன்னையாக்கு கடன் கொடுத்த எல்லா நண்பர்களும் ஜெபக்குழு தலைவர்களும் என் **ஜாமக்காரனை** வாசிக்கிறார்கள். சகோ.சைமன் பொன்னையா அவர்களுக்கு பதில் எழுதுங்கள்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# நாலுமாவடி மிரட்டல்:

## நாலுமாவடி மோகன் சி.லாசரஸ் கூடாரம் கலைகிறது



என்ற தலைப்பில் சகோதரி.**ரோசலின்ரெக்ஸ்** அவர்களையும்,அவரோடு விலகிய மற்றவர்களைப்பற்றியும் ஜாமக்காரனில் வெளியிட்டிருந்தேன். அவர்கள் ஏன் விலகினார்கள் என்று பிறகு எழுதுவேன் என்று ஜனவரி 2016 ஜாமக்காரனில் எழுதியிருந்தேன்.

பிப்ரவரி 2016 மாதம் மாலை **ஒரு மிரட்டல்** தொலைபேசியில் வருகிறது. யார் பேசுகிறீர்கள் என்றேன். நாலுமாவடி PA பேசுகிறேன் என்றார். என்ன விஷயம் என்றேன். நீங்கள் **ரோசலின் ரெக்ஸ்** விலகிய விவரத்தைக்குறித்து எழுதினால் **3 கோடிகள்** கோர்ட்டில் கட்ட வேண்டியிருக்கும். ஜாக்கிறதை என்றார். எனக்கு தெரியும். அது சகோ.மோகன் சி.லாரசஸ் அவர்களின் PA அல்ல என்று. மேலும் அன்று **மிரட்டல் எச்சரிப்பை** என்னிடம் பேசிய **நபர் யார்** என்றும் எனக்கு தெரியும். அவர் நாலுமாவடியில் பணம் கையாடல் செய்த நபர் என்பதை அறிந்தேன்.

சிங்கப்பூரில் இருந்தும் நாலுமாவடி கூடாரத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள் விஷயமாக தொலைபேசியில் பேசினார்கள். **மோகன் சி.லாரசஸ்** அலுவலகத்திலிருந்து நீக்கப்பட்ட மற்றொரு நபர்.

அவரின் தவறை தொலைபேசியில் என்னோடு பேசியவர் ஒத்துக்கொண்டார். அவர் நீக்கப்பட்டது நியாயம்தான் என்று மிக ஒழுங்காக மரியாதையாக என்னிடம் பேசினார்கள்.

சகோதரி.ரோசலின்ரெக்ஸ் அவர்கள் நல்ல தாலந்து பெற்றவர். உண்மையுள்ளவர் தெய்வ பயம் உள்ளவர். ஆனால் **மோகன் சி.லாரசஸ்** அவர்களின் தவறான உபதேசத்துக்கு வேறு வழியில்லாமல் துணை நின்றவர். இப்போது உண்மையை விளங்கிக்கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன். அவர் ஊழியம் கிறிஸ்தவர்கள் மத்தியில் தேவை. தேவன் அவரை பயன்படுத்துவாராக.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# ஈரோடு CSI ஆஸ்பத்திரி உயிர்பெற்றது:

**ஈரோடு பிரப் CSI சபையை** ஒட்டியுள்ள **CSI ஆஸ்பத்திரி** மிகவும் பிரசித்திப்பெற்றது. அதை **கோஷா** ஆஸ்பத்திரி என்றுதான் அந்த காலத்திலிருந்து அழைக்கப்பட்டு ஈரோடு மாவட்டமும், அதை சுற்றிலும் உள்ள ஊர்களிலிருந்து பெரும்பான்மையாக **பெண் நோயாளிகள்** நம்பிக்கையுடன் வந்து மருத்துவ உதவி பெற்று சுகம் பெற்று செல்வார்கள். அதன் பிறகுதான் அந்த மருத்துவமனை **கோஷா ஆஸ்பத்திரி** என்று அழைக்கப்பட்டது.

அங்கு செயல்பட்ட **செவிலியர் பள்ளி** நம் CSI சபைகளில் உள்ள பிள்ளைகளுக்கும் மற்ற மாவட்ட ஏழை பிள்ளைகளுக்கும் மிகவும் உதவியாக இருந்தது. **செவிலியர் படிப்பை** படித்து செவிலியர்களாக பணிவிடை செய்யவும், அதன்மூலம் கிடைக்கும் சம்பளத்தில் அந்த ஏழை பிள்ளைகள் தங்கள் சொந்த கால்களில் நிற்க செவிலியர் பணி மிகவும் உதவியாக இருந்தது.

அவர்களின் சொந்த குடும்பத்துக்கும் வாழ்வாதாரமாகவும் இருந்தது. அநேக ஏழை பெண் பிள்ளைகளுக்கு வாழ்வளித்த பள்ளி அது. என் சகோதரிகளில் ஒருவர் ஈரேட்டில் செவிலியர் படிப்பு படித்து சேலம் **டாக்டர்.ராஜரத்தினம்** மருத்துவமனையில் வேலை செய்து தன் வருமானத்தை எங்கள் குடும்பத்துக்காக செலவுசெய்து அன்றைய காலகட்டத்தில் மிகவும் வறுமையிலிருந்த எங்கள் குடும்பத்துக்கு அந்த சகோதரியின் செவிலியர் பணி வருமானம் எங்கள் குடும்பத்தை தாங்கியது. அன்று எங்கள் குடும்பத்தில் படித்துக்கொண்டிருந்த எனக்கும்,கூடபிறந்த மற்ற சகோதரிகளின் படிப்புக்கும் அவர் வருமானம் மிகவும் உதவியாக இருந்தது.

இப்படி ஏராளமான ஏழை பெண் பிள்ளைகள் ஈரோடு CSI ஆஸ்பத்திரி மூலம் பலன்பெற்றார்கள். ஏராளமான ஏழை நோயாளிகள் CSI மருத்துவமனை மூலமாக பயன்பெற்றனர்.

நாளடைவில் சில பிஷப்மார்களும் அவர்கள் ஏற்படுத்திய நிர்வாகிகளும் அந்த CSI ஆஸ்பத்திரியை பாழடைத்து போட்டார்கள். பண ஊழல் பெருகியது.

ஆஸ்பத்திரியை தூக்கி நிறுத்த பல நல்ல டாக்டர்கள் முன் வந்தார்கள். அதில் ஒருவர் சேலம் **டாக்டர்.கிருபா** அவர்களின் மகன் ஆகும். இப்படி பல நல்ல டாக்டர்கள் முயன்றும் CSI டையோசிஸ் பிஷப்மாரும், அவர்கள் நியமித்த நிர்வாகிகளும் **ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் தலையிட்டதால்** பல நல்ல டாக்டர்கள் அந்த ஆஸ்பத்திரியை முன்னுக்கு கொண்டுவர இயலாமல் ஆஸ்பத்திரியைவிட்டே போய்விட்டனர். முதலில்

**செவிலியர் பள்ளி** மூடப்பட்டது.

**இரத்த பரிசோதனை பயிற்சி** பள்ளி நிறுத்தப்பட்டது.

முடிவாக **ஆஸ்பத்திரியும் மூடப்பட்டு** ஒரு மருத்துவர்உள்ள கிளினிக்காக மாறியது.

நான் ஈரோடு CSI ஆஸ்பத்திரியைக்குறித்தும் அதில் நடக்கும் **ஊழல்களைக்குறித்தும்** ஜாமக்காரனில் பக்கம்பக்கமாக எழுதியும், அன்றைய **பிஷப்மார்களும் ஊழலில் பங்கு** வாங்கியதால் ஆஸ்பத்திரி முன்னேற வழி உண்டாக்கவில்லை.

ஈரோடு CSI சபையில் உள்ள விசுவாசிகள், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவ சபை விசுவாசிகளும் கர்த்தரிடம் முறையிட்டு ஜெபித்தனர். அப்படி பாரப்பட்டு ஈரோடு மருத்துவமனைக்காக ஜெபித்தவர்களில் நானும் ஒருவன். கர்த்தர் எல்லாருடைய ஜெபத்தையும் கேட்டார். இப்போது ஈரோடு CSI ஆஸ்பத்திரி உயிர்பெறப்போகிறது என்ற சந்தோஷ செய்தியை அறிவிக்கிறேன்.

## VELLORE CMC ஆஸ்பத்திரி ஈரோடு CSI மருத்தவமனையின் நிர்வாக பொருப்பை ஏற்றெடுத்தது:

ஆம். ஈரோடு CSI ஆஸ்பத்திரியை முன்னேற்றவும் அதற்கு உயிர் ஊட்டவும் அந்த பகுதி மக்களுக்கு நல்ல சிறப்பான **மருத்துவ சேவை** செய்யவும் CMC ஆஸ்பத்திரி அதன் நிர்வாக பொருப்பெடுத்து செயல்பட ஒப்புக்கொண்டார்கள்.

இதற்கு முழு ஒத்துழைப்பு நல்கி முயற்சி எடுத்து உதவிய **கோயமுத்தூர் CSI டையோசிஸ் பிஷப். Rt.Rev.தீமோத்தி ரவீந்தர்** அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

## CMC நிர்வாகத்துக்கு நன்றி:

ஈரோடு ஆஸ்பத்திரியை தன் பொருப்பில் ஏற்றுக்கொண்ட CMC ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கும் சம்பந்தப்பட்ட பொருப்பாளர்களுக்கும் நன்று கூறுகிறோம்.

ஈரோடு நகரில் உள்ள மற்ற மருத்துவமனை டாக்டர்களுக்கு இப்போது பயம் ஏற்பட்டுவிட்டது. தங்கள் வருமானம் பெரிதும் பாதிக்கப்படும் என்று அவர்கள் ஏற்கனவே உணர்ந்ததால் ஆஸ்பத்திரியையே அங்கு இல்லாமலாக்க ஈரோட்டில் உள்ள இந்து மதத்தினரை துாண்டிவிட்டு பல தடைகளை உண்டாக்க முயன்றது நீங்கள் பத்திரிக்கையில் வாசித்து அறிந்திருப்பீர்கள்.

கர்த்தர்தாமே ஈரோடு CSI ஆஸ்பத்திரி மூலமாக புறமதத்தினருக்கு **இயேசுவையும்,** அவர் **அன்பையும்** காண்பிக்க ஈரோடு மாவட்ட அனைத்து மத மக்களும் **இயேசுவே தெய்வம்** என்று அறிந்துக்கொள்ள ஈரோடு CSI ஆஸ்பத்திரியை பொருப்பெடுத்து நடத்தப்போகும் CMC நிர்வாகத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. ❖❖❖❖❖❖❖❖❖❖❖

## ஆணைக்கட்டி டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரி:

**ஆணைக்கட்டியில்** உள்ள டிரைபல் மிஷன்(**பெத்தானி ஆஸ்பத்திரி**)ஆஸ்பத்திரியையும் CMC ஆஸ்பத்திரி நிர்வாகம் பொருப்பெடுத்து நடத்தினால் பெருமளவு அந்த மலைப்பகுதி **இருளர்** இன ஆதிவாசிகளுக்கும், அந்த பகுதியில் வாழும் மற்ற மக்களுக்கும் பிரயோஜனமாக இருக்கும் என்பதற்காக பலமுறை ஆணைக்கட்டி டிரைபல் மிஷன் தலைமை **டாக்டர்.முரளிதர்** அவர்கள் CMC ஆஸ்பத்திரியை நிர்வாகத்துடன் தொடர்புகொண்டார்.

கடந்த மாதம் நானும் வெல்லுார் CMC ஆஸ்பத்திரி சென்று சில பொருப்பாளர்களை இது விஷயமாக சந்தித்து பேசினேன். நம்பிக்கையுள்ள பதில் பெற்றேன்.

**Dr.முரளிதர்** அவர்கள் மேற்கொண்டு CMC ஆஸ்பத்திரி தலைமை நிர்வாகிகளுடன் தொடர்புகொண்டார். விரைவில் CMCயின் பொருப்பில் **டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியும்** முன்னேற்றம் காணும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரி வருமானம் மிகக்குறைவு. ஆதிவாசிகளிடம் வைத்தியத்துக்கு பணம் எதுவும் வாங்குவதில்லை. இங்கு 6000க்குமேல் இருளர் என்ற ஆதிவாசி மக்கள் உள்ளனர். அந்த ஆஸ்பத்திரியில் 9 டாக்டர்கள், செவிலியர் பள்ளி இவைகளை நிர்வாகிக்க டாக்டர்களுக்கு தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்க முடியாதநிலையில் டிரைபல் மிஷன் இருப்பதால் நாங்கள் CMCக்கு ஒப்படைக்கும் முடிவு எடுத்தோம் ஜெபியுங்கள். அந்த மலைவாசிகளுக்கு மருத்துவமனைமூலம் நன்மை கர்த்தர் அருள்புரிவாராக.

## IEM அருட்பணிக்கு புதிய பொது செயலர்:

IEM மிஷனரி ஸ்தாபனத்துக்கு **Rev.Dr.ராஜாசிங் எலியாஸ்** அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். **Dr.தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் ஆரம்பித்த IEM மிஷனரி ஸ்தாபனமானது இன்று மிக அற்புதமாக வளர்ந்துள்ளது.



IEM புதிய பொது செயலர் Rev.**ராஜாசிங் எலியாஸ்** அவர்களின் தகப்பனாரைப்பற்றி இங்கு கூறுவது மிக முக்கியம். கல்ராயன் மலையில் முதல் மிஷனரியாக மலையில் உள்ள சிறிய குடிசையில் தங்கி அற்புதமான ஊழியம் செய்து நிறைவேற்றி, அந்த மலையில் பல சபைகளை உருவாக்கியவர். **கல்வி நிலையங்களையும், ஆலயங்களையும்** அங்கு உருவாக்கி, காட்டுக்குள் வசிக்கும் கிராமத்து பிள்ளைகள் தங்கி படிக்க **தங்கும் விடுதிகளை** பணிய பல லட்ச ரூபாய்களை பலரிடம் கெஞ்சி வாங்கி பல கட்டிடங்களை **கல்ராயன் மலையில்** உருவாக்கினார். ஆனால் இவர் தங்கின **குடிசையை** இவர் மாற்றாமல் கடைசி வரை குடிசையிலேயே வாழ்ந்து ஊழியத்தை நிறைவேற்றி ஓய்வு பெற்றார்.

ஓய்வுபெற்றும் தனக்கு பெலன் இருக்கும்வரை மிஷனரி பணி செய்வேன் என்று **கொல்லிமலையை** தேர்ந்தெடுத்து அங்கும் அற்புதமாக பணியாற்றி அங்கு ஒரு ஆலயம் கட்டியிருக்கிறார். மேலும் அங்கு பள்ளிக்கூடம் கட்டிடம் கட்டியிருக்கிறார். பிள்ளைகள் தங்கும் விடுதி பணிதிருக்கிறார். அதுமட்டுமல்ல இப்போது (பெரிய மருத்துவமனை) அந்த கொல்லிமலையில் ஆஸ்பத்திரியையும் உருவாக்கி மிக சிறப்பாக மிஷனரி பணியை செய்துக் கொண்டிருக்கிறார். தான் பெற்ற பிள்ளைகளுக்கு மிக உயர்ந்த கல்வி அளித்தார். இவர் பெற்ற பிள்ளைகள் அனைவரும் விதவிதமான ஊழியங்களையும், சமூக சேவைகளையும் செய்து கொண்டிருக்கிறனர். இதில் குறிப்பிடவேண்டிய முக்கிய விஷயம் என்னவெனில் அத்தனை பிள்ளைகளும் தெய்வபயம் உள்ளவர்களாகவும் நல்ல சாட்சியுடனும் வாழ்கிறார்கள் என்பது இவர் வாழ்க்கையில் சிகரம் வைத்ததுபோலாகும்.

Rev.எலியாஸ் பெற்ற பிள்ளைகளில் ஒருவர்தான் Rev.Dr.ED.Rajasingh, IEM பொது செயலர் ஆவார். இப்படிப்பட்ட மிஷனரி பாரம்பரியத்தில் வந்த **Rev. ராஜாசிங்** அவர்களின் தலைமையில் IEM மிகப் பெரும் வளர்ச்சி பெரும் என்பதில் சந்தேகம் இல்லை.

Rev.Dr.Rajasingh அவர்களை ஜாமக்காரன் சார்பில் வாழ்த்துகிறோம். வரவேற்கிறோம். அவருக்காகவும், IEM ஸ்தாபனத்துக்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம். கர்த்தர் நாமம் மகிமைப்படுவதாக. ஆமென்.

## சத்தியவசன டிவி நிகழ்ச்சிகள் மாற்றம்:

சத்திய வசனம் டிவி செய்திகள் ஒவ்வொரு **ஞாயிறு** காலை 6 மணிக்கு **புதுயுகம்** என்ற டிவி சேனலிலும் -

**திங்கள்** காலை 6.30 மணிக்கு **தமிழன் டிவி**யிலும் ஒளிபரப்பாகிறது.

சேனல் மற்றும் நேரம் மாற்றங்களை கவனிக்கவும்.

## சத்தியவசனம் வானொலி நிகழ்ச்சிகள்:

**திங்கள்** மற்றும் **செவ்வாய்** ஆகிய நாட்களில் காலை 6.15 மணிக்கு MW 1125Khzல் (FEBA) வானொலியில் ஒலிப்பரப்பாகிறது. குடும்பமாக கேட்டு ஆசீர்வாதம் பெறுங்கள்.

# BAHRAIN TAMIL CHRISTIAN CONGREGATION(NEC)

**பெஹரனில்** ஆரம்பிக்கப்பட்ட **தமிழ் திருச்சபை(**NEC) இப்போது 50வது வருட நிறைவு விழாவை 2016 ஜனவரி 22ம் தேதி கோலாகலமாக கொண்டாடியது. இதற்கான வாழ்த்துரை வழங்க சபையினர் எனக்கு கடிதம் எழுதியிருந்தனர். ஆனால் குறிப்பிட்ட காலத்துக்குள் வாழ்த்துரை எழுதி அனுப்ப என்னால் முடியாமல் போனாது.

இந்த பெஹரின் சபை தனி சிறப்பு பெற்றது. அரபு நாடுகளில் முதன்முதல் இந்திய மிஷனரி ஸ்தாபனங்களை தாங்கிய சபை என்றால் அது மிகையாகாது.

அதற்காக கர்த்தர் என்னை கருவியாக பயன்படுத்திற்காக தேவனைத்துதிக்கிறேன். பலமுறை பெஹரனில் கன்வென்ஷனில் பிரசங்கிக்க அழைக்கப்பட்டேன். கடந்த வருடமும் பெஹரின் சபை என்னை அழைத்து கூட்டங்களை நடத்தினது.

இதில் சிறப்பு என்னவென்றால் முதன்முதல் பெஹரின் சபையில் நான் பிரசங்கித்தபோது நான் கூறினேன். எனக்கு காணிக்கை ஏதும் சேகரிக்கவேண்டாம். என் பயண செலவு முழுவதையும் நீங்கள் ஏற்றுக்கொண்டு என்னை உபசரித்தீர்கள். அதுபோதும். ஆனால் ஒரு வேண்டுகோளை உங்கள் முன்வைக்க விரும்புகிறேன். கர்த்தர் ஒரு நோக்கத்தோடு உங்களை இந்தியாவிலிருந்து அரபு நாட்டுக்கு கொண்டுவந்து உங்கள் எல்லாரையும் பணத்தில் செழிப்புள்ளவர்களாக்கினார். எத்தனையோ பேர்கள் விசா கிடைக்காமல் தோல்வியோடு இந்தியாவில் இருப்பதை அறிவேன். அப்படியிருக்க உங்களுக்கு மட்டும் எப்படி விசா கிடைத்தது அதுதான் கர்த்தரின் கிருபை. உங்களை இந்த தேசத்தில் கொண்டு வந்தது உங்களை பணத்தில் உயர்த்த மட்டும் அல்ல, உங்கள் மூலமாக தெய்வ ராஜ்ஜியம் கட்டப்பட தேவன் உங்களை இங்கே கொண்டுவந்திருக்கிறார் என்பதை மறக்கவேண்டாம்.

இப்போது இந்திய தேசத்தில் மிஷனரி ஊழியம் மிக வேகமாக நடந்துக்கொண்டிருக்கிறது. பாரத தேசம் சுவிசேஷத்துக்கு வாசல்களை அடைக்கப்போகிறது. ஆகவே நீங்கள் இந்தியாவிலிருந்து இங்கு பிரசங்கிக்கவரும் ஊழியர்களுக்கு கை நிறைய காணிக்கை கொடுத்து அனுப்புகிறீர்கள். ஆனால் உங்கள் பெஹரின் சபை சார்பில் எத்தனை மிஷனரிகளை தாங்கினீர்கள். பெஹரனில் வாழும் ஒரு குடும்பம் மாதாமாதம் 3000 அனுப்பினால் போதுமே உங்கள் குடும்ப சார்பில் ஒரு மிஷனரி வட இந்தியாவுக்கு அனுப்பப்படுவாரே!, அப்படியானால் உங்கள் சபை ஆராதனையில் வாரம் ஒருமுறை எடுக்கும் காணிக்கை எத்தனை லட்சங்கள்வரும், அந்த கணக்கில் எத்தனையோ மிஷனரிகளை அனுப்பியிருக்கலாம், மரத்தடியில் ஆராதனை நடத்திக்கொண்டிருக்கும் காட்டுவாசிகளுக்கு **ஒரு ஆலயம்** கட்டிக்கொடுத்திருக்கலாமே! கர்த்தர் நிச்சயம் பெஹரின் சபை மக்களாகிய உங்களை **கணக்கு கேட்பார்.** ஜாக்கிறதை! என்று கூறி முடித்தேன்.

அன்று இரவே கமிட்டி கூடினார்கள். தீர்மானம் எடுத்தார்கள். வெள்ளி இரவு பகிரங்கமாக காணிக்கை முழுவதும் இனி மிஷனரி ஸ்தாபனத்துக்கு அனுப்புவோம் என்று சபையில் அறிவித்து முதல் காணிக்கையாக பெரிய தொகையை IEM மிஷனரி ஸ்தாபனத்துக்கும், அதன்பின் FMPB ஸ்தாபனத்துக்குமாக அனுப்பி இன்று ஏறக்குறைய 200 மிஷனரி ஸ்தாபனங்களை பெஹரின் சபையினர் தாங்குகிறார்கள் என்று நினைக்கிறேன்.

என் பிரசங்கத்தை எல்லா இடங்களிலும் பலர் கேட்டார்கள். ஆனால் செய்த பிரசங்கத்துக்கு கொடுத்த ஆலோசனைக்கு முதலாவது கீழ்ப்படிந்தது **பெஹரின் தமிழ் சபையாகும்.**

ஒரு வேதனை, நம் இந்தியாவைப்போல் சபையானது உடைந்த கண்ணாடி துண்டுகள்போல் **பெஹரின் தமிழ் சபை** ஏறக்குறைய 11 துண்டு சபைகளாக பிரிந்து நிற்கிறது. இது அல்ல சபையின் வளர்ச்சி - சபையில் உள்ள ஒரு சிலரின் ஈகோ பிரச்சனை, பதவி ஆசை,தானும் ஒரு பாஸ்டராக வேண்டும் என்ற ஆசை. இந்த ஆசை ஊழியம் செய்யும் நோக்கத்தில் அல்ல! இது சபையில் பிரிவினையை உண்டாக்கும் நோக்கமாகும்.

எப்படியோ இப்போதும் பெஹரின் தமிழ் சபை தள்ளாடி தள்ளாடி, உடைந்தும் சிதறியும் வெளியே போனதுபோக மீதி குடும்பங்கள் இன்னும் மிஷனரிகளை தாங்குவதை நிறுத்தவில்லை என்பது பெருத்த ஆறுதலாகும்.


50வது ஆண்டு விழா கொண்டாடி முடித்த **பெஹரின் தமிழ் கிறிஸ்தவ குழுவையும்**, சபை அங்கத்தினர்களையும் சபை பொருப்பாளர்களையும் வாழ்த்துகிறேன். ஆசிர்வதிக்கிறேன்.

அப்படியே கடல்கடந்து அந்த பாலைவன பிரதேசத்தில் **பெஹரனில் தமிழர்களை ஒன்று சேர்த்து** தமிழ் ஆராதனையை தொடங்க ஆரம்ப காலத்தில் காரணமாக இருந்தவர்களுக்காக தேவனை துதிக்கிறேன்.

பெஹரின் தமிழ் சபைக்கு ஜாமக்காரன் வாசகர்கள் சார்பில் வாழ்த்துதல் கூறிக்கொள்கிறேன்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்:




சகோ.சுவாமிக்கன் அவர்கள் தனது 85வது வயதில் வெல்லூரில் மரணமடைந்தார்.

இவர் நர்ஸ் பயிற்சி பெற்று அதே படிப்பின் தொடர்புடைய MBA அட்மினிஸ்ட்ரேஷன் பட்டமும் படித்து அரபு தேசத்தில் உள்ள **பெஹரின்** நாட்டில் **அமெரிக்கன் மிஷன்** ஆஸ்பத்திரியில் நர்ஸ் வேலையில் சேர்ந்து **நர்சிங் டைரக்டராக** பதவி உயர்வுபெற்று 1987ம் வருடம் ஒய்வுபெற்று மறுபடியும் வெல்லூர் அருகே **கரிகிரி** மருத்துமனையில் சேர்ந்து பணியாற்றினார்.

பெஹரனில் முதல் கிறிஸ்தவ சபையை 7 தமிழ் குடும்பங்களை கூட்டி சேர்த்து நிறுவினார். அதற்கு THE TAMIL CHRISTIAN CONGRECATION என்ற பெயரில் பெஹரனில் பதிவுசெய்து சபை நடத்தினர். அவர் ஓய்வுபெற்று பெஹரினிலிருந்து வெளியேரும்போது சுமார் 300 குடும்பங்களுக்கு மேல் ஒன்று சேர்ந்து ஆராதிக்க தொடங்கினார்கள்.

இவருக்கு மனைவி 3 பிள்ளைகள் உண்டு. அனைவருக்கும் டாக்டர் படிப்பில் உயர்கல்வி பெற செய்தவர். இவருக்கு பேரப்பிள்ளைகளும் உண்டு. இவர்விட்டு சென்ற மனைவி, பிள்ளைகள், மற்றும் பேரப்பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.

## வாழ்த்துகிறோம் - வரவேற்கிறோம்:



‘ **IEM** மிஷனரி ஸ்தாபனத்துக்கு புதிய பொது செயலாளராக தெரிந்தெடுக்கப்பட்ட Rev.Dr.RAJASINGH அவர்களை வாழ்த்துகிறோம். அவரைப்பற்றிய மற்ற விவரங்களை இந்த ஜாமக்காரனில் 29ம் பக்கத்தில் எழுதியுள்ளேன்.



‘ **FMPB** மிஷனரி ஸ்தாபனத்துக்கும் புதிய பொது செயலாளராக Rev.SUDARSHAN, MA.,BD.,அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். ஆசியாவில் மிகப்பெரிய மிஷனரி ஸ்தாபனத்துக்கு பொருத்தமான ஒருவரை மிஷனரி தலைமை தெரிந்தெடுத்ததால் பாராட்டுகிறேன். அவர்களை வாழ்த்துகிறேன்.

‘ இரண்டு மிக முக்கிய மிஷனரி ஸ்தாபனங்களுக்கும் பொது செயலாளராக தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்காக வாசகர்கள் அனைவரும் ஜெபிப்போம்.

**FEBRUARY 2016**

# Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.